காவியத்துள் ஒரு வீரகாவியம்

வீரம்! விளையாடுகிறது!

பி.ஸ்ரீ

11

வீரன் உடம்பைப் பார்க்கிறாள் மனைவி. அழாமலே அந்தத் துயரத்தில் லயித்து விடுகிறாள்.

'அழ வேண்டும்; அல்லது இவளும் இறந்து போவாள்!' என்று தீர்மானித்தவர்கள் இவள் குழந்தையைக் கொண்டு வந்து காட்டுகிறார்கள்.

உடனே அழுகை வந்து விடுகிறது; உயிரும் நிலைத்து விடுகிறது. 'குழந்தாய்! உனக்காக வாழ்வேன்' என்கிறாள்.

இது ஓர் ஆங்கிலப் பாட்டில் காணப் படும் ஒரு நிகழ்ச்சி.

தீயிலே செந்தாமரை

போர்க்களத்திலே ராமன் மூர்ச்சித்துக் கிடப்பதைச் சீதை பார்க்கிறாள். பிரிந்திருந்த நிலையிலும் அவன் உருவத்தையே அல்லாமல் வேறு எதையும் அகக் கண்ணால் கண்டதில்லை. இப்போதோ இப்படிப் புறக் கண்ணால் பார்க்கவும் நேர்ந்து விடுகிறது!

அவஸ்தை மரணாவஸ்தைதான் என்பதைச் சொல்லவா வேண்டும்? விஷம் உண்டவள்போல் அவஸ்தைப்படுகிறாள்.

மூச்சு முட்டுவது போன்ற உணர்ச்சி; ஓய்ந்து போவது போன்ற ஒரு நிலை. உடம்பும் படிப்படியாக ஓய்ந்து போகிறது,—மரணமே வந்து கொண்டிருப்பது போல.

நெருப்பிலே விழுகிறது ஓர் அழகான தாமரைப் பூ: அதன் நிலை என்ன அப்படித் தகிக்கப் படுகிறதாம் பூவைப் போன்ற பிராட்டியின் மேனியும் சோக நெருப்பிலே.

சகிக்க முடியாத இந்த மரணாவஸ்தை மரணத்தையே விளைத்து விடுமோ? ஆனால் அழுகை தான் உடனே வந்து விடுகிறதே!

இவளைக் காப்பாற்றும் 'குழந்தை' இவள் உள்ளத்தின் உள்ளே காணும் நம்பிக்கைதான்—தருமத்தின் மீதும் கணவன் மீதும் உள்ள அந்தரங்க விசுவாசம் தான்.

உத்தம வீரன் ஒருவனது கோபமாகிய தர்மாவேசத்திற்கு முன் மாயை முழுதும் நடுங்கி ஒடுங்கிப் போய்விடும் என்று கூறுவது உண்டு.

> அல்லற்பட்(டு) ஆற்றா(து),
> அழுதகண் ணீர்அன்றே
> செல்வத்தைத் தேய்க்கும்
> படை

என்பர் திருவள்ளுவர்.

சீதையின் அழுகையோ உலகமெங்கும் எதிரொலிக்கிறதாம்: உலகத்தையே அழப் பண்ணுகிறதாம்.

> மங்கை அழுதாள்;
> வானாட்டு மயில்கள்
> அழுதார்; மழவிடையோன்
> பங்கில் உறையும்
> குயில் அழுதாள்; பதும —
> மலர்மேல் மா(து) அழுதாள்;
>
> கங்கை அழுதாள்;
> நாமடந்தை அழுதாள்;
> கமலத் தடங்கண்ணன்
>
> தங்கை அழுதாள்;
> இரங்காத அரக்கி
> மாரும் தளர்ந்(து) அழுதார்.

[மழ விடையோன் - இளமையாகத் தோன்றுகிற காளையை வாகனமாக உடைய சிவபெருமான். பங்கில் - பாகத்தில். குயில் – (இங்கே) பார்வதி. பதும மலர்மேல் மாது - செந்தாமரை மேல் வீற்றிருக்கும் மகாலட்சுமி. நாமடந்தை நாவில் உறையும் சரஸ்வதி தேவி. கமலத் தடங்கண்ணன் தங்கை – செந்தா

மரை மலர் போன்ற பெரிய கண்களை உடைய திருமாலின் உடன்பிறந்தவளான துர்க்காதேவி.]

சீதையை அனுமன் கண்டு கணையாழி கொடுத்துச் சூடாமணி பெற்று ராமனிடம் மீண்டு வந்து செய்தி தெரிவிக்கும் போது சீதையைப் பெண்குலத்தின் வெற்றியாகக் குறிப்பிட்டான். அந்த வெற்றியில் உலகமெல்லாம் பங்கு கொண்டதாகவும் தெரிவித்தான்.

அந்த வெற்றியில் இவ்வுலக மங்கையர்க்கு மட்டு மல்ல, வானாட்டு மங்கையர்க்கும் பங்கு உண்டு என்றான் அனுமன். உமாதேவியும் அந்த வெற்றியில் பங்கு கொண்டாள், மகாலட்சுமியும் பங்கு கொண்டாள் என்று சொன்னான்.

இப்படிப் பெண்ணுலகுக் கெல்லாம் வெற்றி தேடித் தந்த பிராட்டியைச் 'சோகத்தாளாய நங்கை' என்று குறிப்பிட்டான், — தேவகுமாரனாகிய கிறிஸ்து பெருமானைச் 'சோகத்தால் ஆகிய மனிதன்' என்று சுட்டிக் காட்டுவது போல.

'சோகத்தாளாய நங்கை'யின் வெற்றியில் பங்கு கொண்டவர்கள் இவளுடைய சோகத்திலும் பங்கு கொள்ள வேண்டுமல்லவா? அங்கே கற்பின் வெற்றி; இங்கே சோகத்திற்கே வெற்றி தான்.

சோக நெருப்பில் தானே விசேஷ மலர்ச்சி பெறுகின்றது, ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாகிறது சீதையின் குணாதிசயம் என்ற செந்தாமரை!

அங்கே அந்த வெற்றியில் பங்கு பெறாத அரக்கிமாரும்கூட இங்கே இப்போது இந்தச் சோகத்தில் பங்கு கொள்கிறார்கள் என்று கூறுவது மனோபாவத்தின் வெற்றி. காளியும் அழுதாள் என்று சொல்லிவிட்டு 'இரங்காத அரக்கிமாரும் தளர்ந்து அழுதார்' என்று கூறுவது கூர்ந்து நோக்கத் தக்கது.

ராமன் இறந்தான் என்றே கருதித் துயர நெருப்பில் உருகிக் கொண்டிருந்த சீதையைக் கண்ட அரக்கிமாரும், 'இவள் அப்படியே இறந்து போய் விடுவாள்!' என்றுதான் எண்ணியிருக்க வேண்டும்.

'மங்கை அழுதாள்' என்றதும் 'ஐயோ, பிழைத்துக் கொண்டாள்!' என்றே இவர்களும் கண்ணீர் வடித்துச் சற்று ஆறுதல் பெற்றிருக்க வேண்டும்.

அழுகை ஓய்ந்ததும் சீதை மூர்ச்சித்து விழுந்து விடுகிறாள். 'நினைப்போடு மூச்சும் நின்று விட்டதோ?' என்று தோன்றுகிறது. உடனே அரக்கிமார் தண்ணீரை மேலே தெளித்துக் கைகளால் வாரியெடுத்து, சைத்தியோபசாரம் செய்கிறார்கள்.

நெடும்பொழுது கழிந்தபின் ஒடுங்கியிருந்த உயிர் வெளிப்படுகிறது, ஏங்கிய அழுகுரலுடன்.

மறுபடியும் ராமனைப் பார்க்கிறாள்: கண்கள் மீது கையால் மோதிக் கொள்கிறாள்.

விழுந்தாள், புரண்டாள்;
உடல்முழுதும் வியர்த்தாள்;
அயர்த்தாள்; வெதும்பினாள்;
எழுந்தாள்; இருந்தாள்,
மலர்க்கரத்தை
நெரித்தாள்;
சிரித்தாள்;
ஏங்கினாள்;
'கொழுந்தா!'
என்றாள்;
'அயோத்தியர்
தம் கோவே!'
என்றாள்;
'எவ்வுலகும்
தொழும்தாள்
அரசே!
ஓ!' என்றாள்;
சோர்ந்தாள்;
அரற்றத்
தொடங்கினாள்.





[அயர்த்தாள் - ஒய்ந்து போனாள். கொழுந்தா - கொழுந்தனே; கணவனுடன் பிறந்தவனே. தொழும்தாள் - தொழத் தக்க திருவடிகள். அரற்ற - வாய்விட்டுப் புலம்ப.]

அந்தக் களத்திலே விழுந்து கிடந்த லட்சுமணனையும் பார்த்து விடுகிறாள். எனவே, இருவரையும் கூவிக் கதறத் தொடங்குகிறாள் சீதை.

தருமம், விதி, தருமன்

பார்வையைக் கண்ணீர் திரை யிடுகிறது. களம் மறைந்து போகிறது, அரக்கிமாரும் மறைந்து விடுகிறார்கள்.

திரைக்கு அப்பால் மூன்று நிழல் — உருவங்கள்; ஒன்று தருமம்; அடுத்தது விதி; அதை யடுத்து மரணம் (யம தருமன்!)

தருமத்தை நோக்குகிறாள். 'உன் மீது தான் என்ன காதல் என் கணவருக்கு! ஆனால் இப்போது, நீ அரக்கருக்கு நண்பனாகி விட்டாயோ!' என்று கேட்கிறாள்.

அறமே! கொடியாய்!
இதுவோ அருள்தான்?

என்றும் கேட்கிறாள்.

விதியை நோக்குகிறாள், திரையை மேலும் விலக்கிக் கொண்டு. 'வேதம் சொல்லும் சத்தியம் என்ற வழி தவிர வேறு கதியில்லாத எங்களுடைய துயரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே! விளையாடிக் கொண்டிருக்கிறாயே!' என்கிறாள்.

விதியே! கொடியாய்!
விளையாடுதியோ?

[விளையாடுதியோ - விளையாடுகிறாயோ?]

மரண தேவதையை நோக்குகிறாள், 'என் உயிரையும் முடித்துவிடலாகாதா?' என்று.

கண்ணீர்த் துளிகள் போல் மாய்ந்து போகின்றன இக் காட்சிகள். மறுபடியும் போர்க்களம் தான், கண்ணெதிரிலே ராமன் உடம்புதான், அந்த இரவு தான்!

'விடியாத இருள்' என்று எண்ணமிடுகிறாள்.

விடியா இருள்வாய்
என்னை இனியே,
அடியேன் உயிரே!
அருள்நாயகனே!

என்று ராமனை நோக்கிச் சொல்லுகிறாள்.

இதுவும் கைகேயி சூழ்ச்சியா?

பழைய இரு நினைவுகள் பாய்ந்தோடி வருகின்றன. கல்யாண நினைவு ஒன்று. காடு புகுந்த நினைவு ஒன்று.

மணப் பெண்ணைத் தேடி மிதிலைக்கே வந்து விடுகிறான் மாப்பிள்ளை. அக்கினி சாட்சியாகப் பாணிக்கிரகணம் நடக்கிறது.

'அதன் பலன்தான், பாவியாகிய என் கையைப் பற்றிக் கொண்ட அந்தப் பாவம்தான், இப்படி உன் உயிரை முடித்து விட்டதோ?' என்று கேட்கிறாள்.

'கல்யாணம் முடிந்து அயோத்திக்கு வந்து விடுகிறார்கள். அதிர்ஷ்டத்துக்கு மேல் அதிர்ஷ்டம்; சக்கரவர்த்தி முடிசூட்டு விழாவையும் பார்க்க ஆசைப்படுகிறார்.

ஆனால் கைகேயி குறுக்கிட்டு ராமனை நோக்கி, 'நீ காட்டுக்குப் போய்ப் பதினான்கு ஆண்டுகள் கழித்து வரவேணும் என்பது அரசன் கட்டளை' என்கிறாள்.

உண்மைதானா?

அவள் வாய்தான் அப்படிச் சொல்லுகிறதாம். கருத்தோ, 'இந்த அயலார் ஊரில் இப்படி முடிந்து போக வேண்டும்; பதினான்கு ஆண்டுகள் கழிந்தும் திரும்பிவரக் கூடாது!' என்றே இருக்கலாமோ?

இப்படிச் சிந்திக்கிறாள் சீதை. கைகேயியைக் குறித்து இவள் இதுவரை இப்படி நொந்து கொண்டு ஒன்றும் சொன்னதில்லை.

இப்பொழுதோ 'கொடுங் கைகேசி' என்கிறாள். ராமனை நோக்கி,

கைகேசி கருத்(து)
இதுவோ? களிறே!

[களிறே — ஆண் யானை போன்றவனே; (இங்கே) ராமனே.]

என்று கேட்பதைப் பாருங்கள்.

சீதையும் திரிஜடையும்

இப்படியெல்லாம் எண்ணியும் புலம்பியும் சீதை, 'இனிமேல் இந்தத் துன்பத்தை என்னால் தாங்க முடியாது; காதலன் மேல் விழுந்து ஸதியாகி உயிர் துறப்பேன்!' என்று துணிகிறாள்.

அப்போது அரக்கியர்களை விலக்கிக் கொண்டு ஓர் அரக்கி சீதையை நெருங்கி வந்து தழுவிக் கொண்டு சில வார்த்தைகள் சொல்லுகிறாள்.

சீதையோடு ஒன்றாகி விட்டவள்போல் இறுகத் தழுவிக் கொண்டு காதோடு காதாய்ப் பேசிக் கொண்டிருக்கும் இந்த அரக்கி யார்? வேறு யாருமில்லை, விபீஷணனது அருமைப் பெண்ணான திரிஜடை தான்.

இவள் என்ன சொல்லுகிறாள்? மாய மானையும் மாயா ஜனகனையும் நினைவூட்டுகிறாள். நாகபாசம் கட்டியதே, அது போய் விட்டதல்லவா? அவற்றையெல்லாம் நீ நினைத்துப் பார்க்கவில்லையே!'' என்கிறாள்.

'ராமன் உடம்பை நீ நன்றாகப் பார்க்கவில்லையே; ஏதாவது அம்பு தைத்திருக்கிறதா?' என்று கேட்கிறாள். அம்புகள் தைத்துக் கிடக்கும் இளையவன்

முகத்தைச் சுட்டிக் காட்டி, 'இந்த முகக் களையைக் கூர்ந்து பார்' என்கிறாள்.

இப்படி யெல்லாம் திரிஜடை ஆறுதல் சொல்லச் சீதை, 'உன்னைத் தெய்வமாகக் கருதி, உன் மொழியையும் பொய்யா மொழியாக நம்பி, இத்தனை காலம் உயிர் வாழ்ந்திருந்த நான் இன்னும் இந்த இரவு முடியும் அளவும் உயிர் வைத்துக் கொண்டிருப்பேன்' என்று பதில் சொல்லுகிறாள்.

பிறகு சீதை ராமன் மேனியையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அம்பு ஒன்றும் ராமன் மேனியில் தைக்கவில்லை என்று திரிஜடை சொன்னாளல்லவா? 'அந்த மேனியில் இப்போது வேல் தைத்திருக்கிறது!' என்று சொல்லும்படி சீதை ஊன்றி நோக்கிக் கொண்டேயிருக்கிறாளாம்.

சீதையும் அரக்கிமாரும்

இந்த நிலையில் இவளைக் கைகளால் பற்றிக் கொண்டு அரக்கியர் விமானத்தைத் தூண்டிச் செலுத்திக் கொண்டு போவதைப்பாருங்கள். இப்போது அரக்கியர் இரக்கமிலாத பழைய அரக்கியராகி விட்டார்கள் :

தையலை, இராமன்
மேனி தைத்தவேல் —
தடங்க ணாளைக்
கைகளில் பற்றிக்
கொண்டார், விமானத்தைக்
கடாவு கின்றார்.
மெய்யுயிர் உலகத்
தாக, விதியையும்
வலித்து, விண்மேல்
பொய்யுடல் கொண்டு
செல்லும் நமனுடைத்
தூதர் போன்றார்.

[தையலை — பெண்ணாகிய சீதையை. வேல் தடங்கணாளை-வேலாயுதம்போன்ற பெரிய கண்களுடையவளை. கடாவுகின்றார் - தூண்டிச் செலுத்துகிற அரக்கிமார். மெய் உயிர் உலகத்தாக — மெய்யான உயிர் மண்ணுலகில் இருக்க. வலித்து - வலிமையால் கடந்து.]

*　　*　　*

இதுவும் விதியின் விளையாட்டா? விதியென்றால் காரண காரியச் சங்கிலிப் பின்னல்தானே. காரணம் இல்லாமல் காரியம் நிகழுமா?

காவியத்துள் ஒரு வீரகாவியம்

வைத்தியமும் வைத்தியநாதனும்

பி. ஸ்ரீ

12

வானர வீரர்களுக்கு உணவு கொண்டு வருகிறான்; 'ஐயோ! பசித்திருப்பார்களே' என்று அவசரமாக வந்து விடுகிறான். ஆனால் அங்கே ஏற்கெனவே விருந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆ என்ன பயங்கர விருந்து! விபீஷணன் திகிலடைகிறான்.

நடுக்கமும் நம்பிக்கையும்

நாய்களும் நரிகளும் பேய்களும் விருந்தாளிகள்! விபிஷணனைக் கண்டதும் நிலை கெட்டு ஓடுகின்றன.

இனிமேல் இந்த வானர வீரர்களுக்குப் பசி ஏது?—போர்க் கவலை தான் ஏது? ராமலட்சுமணரும் கை விட்டார்களா?

வளைந்த பேய்க் கணமும்
நாயும் நரிகளும்
இரிய வந்தான்,
இளங்கிளை யோடும்
சாய்ந்த இராமனை
எய்திக் கண்டான்.

[வளைந்த - சூழ்ந்து கொண்டிருந்த. பேய்க்கணம் — பேய்க் கூட்டம். இரிய - நிலைகெட்டோட. இளங்கிளை யோடும் — தம்பியோடும். எய்தி - அடைந்து.]

இந்த நிலையில் ராமனைக் கண்ட பேரன்பனுக்கு உயிர் போய் விட வில்லை என்கிறான் கவி. அவன் வாய் விட்டுப் புலம்பவும் இல்லையாம்?

நெஞ்சு எரிகிறது ஒரே எரிச்சலாக! 'அழியா அழகு' என்று சொல்லத்தக்க ராமன் மேனிக்கும் அழிவுண்டா?

முதலில் ஆராய்ந்து பார்க்கவும் ஆற்றல் இல்லை. பிறகு அந்த உடம்பைக் கூர்ந்து கவனித்துப் பார்க்கிறான்.

'நாயகன் மேனிக்(கு)
இல்லை வடு' என
நடுக்கம் தீர்ந்தான்.

அஸ்திரம் பாய்ந்த வடுவும் இல்லை என்று தெரிந்ததும் நடுக்கத்தால் தெளிவில்லாமற் இருந்த உள்ளத்திலே அறிவுத் தெளிவு பிறக்கிறது. மூளை சுறுசுறுப்பாக வேலை செய்கிறது.

'ஓஹோ, பிரமாஸ்திரத்தின் விளைவு தானோ?' என்று ஆலோசித்துப் பார்க்கிறான். அந்த அஸ்திரத்தை எய்தவன் இந்திரஜித்தே என்பதும் தெளிவாகிறது.


ராமன் மேனி வடு இல்லாமல் இருப்பதையும், தம்பி மேனியில் அஸ்திரங்கள் தைத்திருப்பதையும் கண்டவன், 'சரி, சரி; தம்பிக்காக நொந்து மூர்ச்சித்திருக்கிறான் தமையன்' என்பதையும் தெரிந்து கொள்கிறான்.

ராமன் செத்துப் போகவில்லை யென்பது உண்மைதான். ஆனால் தம்பி செத்துப் போய் விட்டால் தமையன் தான் பிழைத்திருக்க முடியுமா? எப்படியும் வெற்றி அரக்கர்களுக்குத் தானோ?

விபீஷணன் அழுகிறான். இந்தக் கண்ணீர் மழையில் தன்னைப் பற்றிய எண்ணத்திற்கோ, தன்னல மாசுக்கோ சிறிதும் இடமில்லை.

'வள்ளலோ தம்பி
மாய வாழ்கிலன்;
மாய வாழ்க்கைக்
கள்வரோ வென்றார்?'
என்று, மழையெனக்
கலுழும் கண்ணான்.

[என்று—என்று. கலுழும் கண்ணான்—துக்கத்தால் அழுது கொண்டிருக்கும் கண்களையுடைய விபீஷணன்.]



அறிவு மேலும் தெளிவு பெறுகின்றது. மூளை அமைதியாக, நிதானமாக வேலை செய்கிறது.

கொள்ளிக்கட்டையொன்றைக் கையில் ஏந்திக்கொண்டு தன்னந் தனியனாக விரைந்து போகிறான் விபீஷணன். 'இந்தக் களத்திலே இறவாதிருப்பவரும் உண்டோ ?' என்று தான் தேடிப் போகிறான்.

யானைப் பிணங்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன ஒரு பக்கத்திலே. அந்தப் பிணங்களைப் படுக்கையாகக் கொண்டு ஒருவன் படுத்திருக்கிறான். என்ன கோரம் !

வாய் மடித்திருக்கிறது. இரண்டு கைகளையும் முறுக்கிக் கொண்டிருக்கிறான். கண்களில் நெருப்புப் பொறி பறப்பது போல் கோபம் பொங்கிக் கொண்டிருக்கிறது. தோள்கள் பூரிக்கின்றன. ஆனால் அந்த உடம்பிலே தான் எத்தனை அம்புகள் !

'அனுமனுக்கா இந்தக் கதி? கடல் கடந்த அந்த வீரமா இப்படிக் கிடக்கிறது ?' என்று துடிக்கிறது நெஞ்சு; கண்கள் மழை கொட்டுகின்றன. எனினும் விபீஷணனுக்கு நம்பிக்கை பிறந்து விடுகிறது. அனுமனது உடலம்புகளைக் களைந்து களைப்பையும் போக்குகிறான்.

அனுமன் நன்றாக மூச்சு விடுகிறான். ரோமம் சிலிர்க்கிறது. களைப்பு நீங்கவே ஜீவ களை பிறக்கிறது. கண்கள் விழித்துக் கொள்கின்றன. உடம்பை மெல்ல அசைத்துக் கொண்டு, வாயில் நீர் வந்து ஊற, விக்கலும் தோன்ற 'ராம' என்று பேசத் தொடங்குகிறான். விபீஷணனுக்கு நம்பிக்கை அதிகரிக்கிறது.

ராம நாமத்தை வாழ்த்தி வாழ்த்திக் கொண்டே பேசத் தொடங்குகிறான். அனுமன் ராமனுடைய க்ஷேமத்தை விசாரிக்கிறான். பிறகு 'ஜாம்பவான் எங்கே ?' என்று வினவுகிறான்.

கிழவன் மருந்து

இருவரும் ஜாம்பவானைத் தேடிப் பார்க்கிறார்கள். அந்தப் பெருங் கிழவன் மூப்பினாலும், அம்பு பொத்திய நோவினாலும், நண்பர்களைப் பற்றிய கவலையின் அரிப்பாலும் மூச்சு அடங்கியது போலக் கிடந்தான்; அந்த மயக்கம் கொண்ட நிலையிலும் தன் கரடிச் செவிகளைக் கொண்டு இரு நண்பர்களும் வருகிற ஓசையை உணர்ந்து கொள்கிறான்.

முதல் முதல் அனுமனும் விபீஷணனுமே வருகிறார்கள் என்பதை உணர்ந்து

கொள்ள முடியவில்லை. 'பகைவர்களோ வெற்றிச் செருக்குடன் போய் விட்டார்கள்; இப்போது வருகிறவர்கள் நம்மைப் பாதுகாக்க வருபவரே' என்ற நினைப்புடன், அந்த ஓசையை மேலும் கூர்ந்து கவனிக்கிறான்.

அப்படியானால், வருகிறவர் தேவரா, முனிவரா?

இரக்க முற்(று) அருள
வந்த தேவரோ?
முனிவ ரேயோ?

என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான்.

மறுபடியும் ஒருமையுள்ளத்துடன் கவனித்து 'அந்தக் காலடிச் சத்தம் அனுமனுக்கு உரியது' என்று தீர்மானிக்கிறான். தீர்மானித்து,



அனுமன்
தானோ?

என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான்.

ஆனால் இரண்டு பேர் வருகிறார்களே, அந்த மற்றக் காலடிச் சத்தம்?

அரக்கனோ? என்னை
ஆளும் அண்ணலோ?

[அரக்கன்-(இங்கே) விபீஷணன். அண்ணல்-ராமன்.]
என்று ஐயம் கொள்வதைப் பாருங்கள்

விபீஷணனுடைய காலடிச் சத்தமும் ராமனுடைய காலடிச் சத்தமும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக ஜாம்பவான் காதில் விழும் என்ற இக் குறிப்பு உய்த்துண ரத்தக்கது.

தர்மாத்மாவான விபீஷணன் நடப்பதும் தர்மமே ராமனாகி நடப்பதை நினைவூட்டுகிறதாம். விபீஷண குணாதிசயத்தை விளக்கிக் கொள்வதற்கு எத்தகைய நுட்பமான ஓர் அதிசயக் குறிப்பு இது!

அயல் வந்து நின்றவர்களை ஜாம்பவான் 'நீங்கள் யார்?' என்று வினவ, 'நாங்கள் உய்ந்தோம், உய்ந்தோம்?' என்று விபீஷணன் பதில் சொல்லுகிறான். அனுமன் தன்னையும் தெரிவித்துக் கொள்ள, ஜாம்பவான் 'இனி எல்லோருமே பிழைத்துக் கொண்டோம், பிழைத்துக் கொண்டோம்' என்று குதூகலம் அடைகிறான்.

'அது எப்படி?' என்று அனுமனும் விபீஷணனும் கேட்கக் கூடுமல்லவா? 'மருந்து கொண்டு வந்தால் பிழைப்பு மூட்டலாம்' என்பது ஜாம்பவான் அவர்கள் வினாவை எதிர்பார்த்துச் சொல்லும் விடை.

என்ன மருந்து ? எங்கே கிடைக்கும் ? எந்த வைத்தியன் எப்படிக் கொண்டு வரப் போகிறான் ?

'போய்க் கொண்டு வா மருந்தை' என்று அனுமனை நோக்கிச் சொல்லுகிறான் ஜாம்பவான்; 'தாமதமில்லாமல் போய்க் கொண்டு வா' என்கிறான்.

மருந்தின் பெயர் என்ன ? 'மாண்டாரை உய்விக்கும் மருந்து ஒன்று' என்கிறான் ஜாம்பவான். 'வேறு மருந்துகளும் உண்டு; அவற்றையும் நீ கொண்டு வர வேணும்' என்கிறான்.

உடம்பு வெவ்வேறு பிளவாகப் பிளந்திருந்தாலும் அவற்றையெல்லாம் பொருந்தச் செய்து விடுமாம் ஒரு மருந்து. மூன்றும் மருந்து உடம்பில் பாய்ந்திருக்கும் படைக்கலங்களை வெளிப்படுத்தி விடுமாம். நான்காம் மருந்து உருமாறிச் சிதைந்து கிடந்த உடலுக்கும் அதன் பூர்ண ஆரோக்கிய உருவை அளித்து விடுமாம்.

அது கேட்ட அனுமன், 'அப்படியானால் இறந்தாரும் பிறந்தாரே !' என்று சொல்லிப் பேருருவங் கொண்டு விசையாகக் கிளம்பி விடுகிறான்.

'அதோ போகிறது உருவம் தானா ?' என்று கூடச் சந்தேகம் வந்து விடுகிறது;

உருஎன்றார் சிலர்சிலர்கள் ;
  ஒளிஎன்றார் சிலர்சிலர்கள் ;
    ஒளிரும் மேனி
அருஎன்றார் சிலர்சிலர்கள் ;
  அண்டத்துக்(கு) அப்புறம்நின்
    றுலகம் ஆக்கும் (று)
கருஎன்றார் சிலர்சிலர்கள் ;
  கா(று)என்றார் சிலர்சிலர்கள் ;
    கடலைத் தாவிச்
செருவென்றான் நிலையொன்றும்
  தெரியகிலார், உலகனைத்தும்
    தெரியும் செல்வர்

[ஒளிரும் மேனி அரு என்றார் - அனுமனுடைய ஒளி வீசும் மேனியை உருவமல்ல அருவம்தான் என்றார்கள்; அண்டம் ஆக்கும் கரு - உலகத்தைத் தோற்றுவித்த கருப் பொருள்; உலகத்தின் கருப்பப் பை. செரு வென்றான் — போரில் வென்றவனாகிய அனுமன். தெரியகிலார் - தெரியமாட்டாதவரானார்.]

மருந்துவனை வணங்கினான்

அனுமன் மருத்துமலையை (மருந்துள்ள மலையை)க் காண்பதற்கு முன் மேரு மலையின் கிழக்கே ஏக காலத்திலே ஆயிரம் சூரியர் உதயமாகி விட்டது போன்ற ஒரு ஜோதியைக் காண்கிறான். கண்ணின் கூச்சம் சற்றுத் தீர்ந்ததும், அந்த ஜோதி ஐந்து ஒளியுள்ள தாமரைப் பூக்களாக மலர்ச்சி பெறுவதைக் காண்கிறான்.

அந்த மூர்த்தியைச் சுற்றிப் பன்னிற மலர்கள் வந்து விழுவதையும் அதிசயமாகப் பார்க்கிறான். இந்தப் பரிசுத்தமான மலர்கள் எங்கேயிருந்து வருகின்றன ?

நாலு திசைகளிலிருந்தும், எட்டுக் கோணங்களிலிருந்தும், மேலிருந்தும் கீழிருந்தும் வந்து விழுகின்றன மலர்கள். 'உலகம் மூன்றும் தூவிய மலர்கள்' என்று தெரிந்து கொள்கிறான்.

தூயபே ருலகம்
  மூன்றும் தூவிய
    மலர்

[தூய் பேருலகம் மூன்றும் - மூன்று உலகத்திலுள்ள தூய உள்ளம்கொண்ட பெரியோர்களும்.]

என்று தெரிந்து பரம பக்தியுடன் உற்று நோக்குகிறான்.

உமா தேவியை ஒரு பாகத்தில் கொண்ட அம்மையப்பனை வணங்குகிறான்.

ஆயதன் வடகீழ்
  பாகத்(து), ஆயிரம்
    அருக்கர் ஆன்ற
காய்கதிர் பரப்பி,
  அஞ்சு கதிர்முகக்
    கமலம் காட்டி,
தூயபே ருலகம்
  மூன்றும் தூவிய
    மலரிற் சூழ்ந்த
சேயிழை பாகத்(து)
  எண்தோள் ஒருவனை
    வணக்கம் செய்தான்.

[ஆயதன் - அந்த மேரு மலையின். பாகத்து - பாகத்தில். அருக்கர் - சூரியர்கள். கதிர் முகக் கமலம் - ஒளிமயமான முகத் தாமரைகள். சேயிழை - (இங்கே) உமாதேவி.]

வைத்தியநாதனாகிய பரமேசுவரனைக் கண்டதுமே மருந்து கிடைத்து விட்டது போன்ற உணர்ச்சி அனுமனுக்கு ஏற்பட்டு விடுவதாகவும், அந்த வணக்கத்திலே 'வைத்தியம் பலித்து விடும்' என்ற நம்பிக்கை பிறந்து விடுவதாகவும் ஊகிக்கலாம்.

காவியத்துள் ஒரு வீர காவியம்

எங்கும் மகிழ்ச்சி

பி.ஸ்ரீ

13

பேரொளி விசிக் கொண்டிருந்த ஒரு மலையைக் கண்டதும், 'இங்கேதான் தெய்வ மருந்து இருக்க வேண்டும்' என்று ஊகித்து அனுமன் அம்மலை மீது பாய்ந்தான். பின்பு அனுமன் தன் வயிரத் தோள்களால் அந்த மருந்து--மலையைப் பறித்துக் கையில் ஏந்திக்கொண்டு விரைந்து போர்க்களம் நோக்கிப் புறப்படுகிறான்.

இதற்குள்ளே விபீஷணனும் ஜாம்பவானும் அதிவிரைவில் ராமனை அடைந்து தங்கள் கைகளால் திருவடிகளை மெல்லப் பிடிக்க அவனும் கண்களை விழித்து அவர்களை நோக்கினான்.

பாசமா, குணாதிசயமா ?

அழுத கண்ணீரும் தொழுத கைகளுமாயிருந்த இருவரையும் 'நீங்கள் க்ஷேமமாயிருக்கிறீர்களா ?' என்று விசாரித்து விட்டு, 'இனி நாம் செய்யத் தக்கது என்ன?' என்று வினவுகிறான்-ராமன். அவர்கள் பதில் சொல்வதற்குள்,

பொன்றினர் தமர்எலாம்;
இளவல் போயினான்,
வென்றிலன் அரக்கனை,
விதியின் வெம்மையால்

[பொன்றினர் — இறந்து விட்டார்கள். தமர் எலாம் — நம்மைச் சேர்ந்தவர்கள் எல்லாம். இளவல் — தம்பியான லட்சுமணன். போயினான் வென்றிலன் — வெல்லாதவனாய்ச் செத்துப் போனான். அரக்கனை — (இங்கே) இந்திரஜித்தை. வெம்மையால் — கோபத்தால்.]
என்று புலம்புகிறான்.

'தம்பியை இழந்து இத்தனை துணைவர்களையும் இழந்த பின்பு, இந்தப் போரைத் தொடர்ந்து நடத்துவதில் தான் என்ன பயன்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான் :

எம்பியைத் துணைவரை
இழந்(து),அப் பால் இனி
வெம்புபோர் அரக்கரை
முருக்கி வேரறுத்(து),
அம்பினின் இராவணன்
ஆவி பாழ்படுத்(து),
உம்பருக்(கு) உதவி, மேல்
உறுவ(து) என் அரோ ?

[எம்பியை — என் தம்பியை. துணைவரை - நண்பர்களை, வெம்புபோர் அரக்கரை — மனம் வெதும்பிப் போர் புரியும் துஷ்ட ராட்சஸர்களை. முருக்கி— அழித்து. அம்பினின் - அம்பினால் ஆவி பாழ்படுத்து — ஆவியையும் தொலைத்து. உம்பருக்கு - தேவர்களுக்கு. மேல் உறுவது என் — அப்பால் அடையப் போவது என்ன.]

'தருமத்தின் பெயரால் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதில்தான் என்ன பயன் ?' என்று ராமனுள்ளமே கேட்கிறதென்றால், லட்சுமணன் மீதும் துணைவர்கள் மீதும் ராமனுக்குள்ள அன்பைத்தான் என்னென்பது ?

இங்கே சகோதர பாசத்திற்கும் தரும பாசத்திற்கும் இடையே, விபீஷணனுள்ளத்தில் எழுந்தது போல், போராட்டம் ஒன்றும் எழுவதற்கில்லை. தம்பியும் துணைவரும் தருமத்திற்குத்தானே போராடினார்கள் !

தருமத்திற்குப் போராடிய தம்பியை இழந்தும், துணைவரை இழந்தும் உலகத்திற்காகப் பணி புரிய வேண்டுமா என்று அந்தத் தருமத்தைத்தான் இப்போது உள்ளம் வெறுக்கிறது. ஆனால் ராமனுடைய உள்ளத்தில் இத்தகைய உணர்சசி இடம் பெறலாமா ?

இப்படி ஒருவனுடைய உள்ளத்தைக் காட்டுவதிலே குண சித்திரங்கள் நிறம் பெறுவதைக் காணலாம். உணர்ச்சிகளின் போராட்டமும் லட்சியத்தின் வெற்றி தோல்விகளும் குணாதிசய வளர்ச்சிக்கு அவசியமானவை.

இளையவன் இறந்தபின்,
எவரும் என் எனக் (கு)?
அளவறு சீர்த்தி என் ?
அறன் என்? ஆண்மை என்?



வான்தனில் நின்றது
வஞ்சர் ஊர்வர
ஏன்றில(து) ஆதலின்,
அநுமன் எய்திஞன்.

[ஏன்றிலது ஆதலின் — உடன்படாததால். எய்திஞன் - அடைந்தான்,]

அப்படியாஞல், மருந்து வந்து சேர்ந்தும் பயன்படவில்லையா? சுக்கிரீவன் முதலியோர் எழுந்து இரைச்சலிடுகிருர்களே?—எப்படி? காற்று மருந்தின்மீது பட்டு வீசுகிறதல்லவா?

மருந்துக் காற்று வீசியவுடனே, பிரமாஸ்திரத்தால் செத்துக் கிடந்தவர்கள் முன்னிலும் வலிமையும் ஏற்றமும் அழகும் பெற்றவர்களாய்ப் பிழைத்துக் கொள்கிருர்களாம்.



அரக்கர்களுடைய உடல்களெல்லாம் சீதை கண்ணில் படவேண்டாம் என்பதற்காகக் கடலில் எறியப்பட்டு அமிழ்ந்து விட்டதால், அரக்கரல்லாதார் அனைவரும் பிழைத்துக் கொள்கிறார்களாம்.

லட்சுமணனும் உயிர் பெறுகிறான். எவ்வளவு அதிசயமாக ஏற்படுகிறது இந்த நிகழ்ச்சி :

கழன்றன நெடுங்கணை ;
கழன்ற புண்கடுத்(து)
அழன்றன குளிர்ந்தன ;
அங்கம் செங்கண்கள்

சுழன்றன ; உலகெலாம்
தொழுத ; தொங்கலின்
குழன்றெழும் குஞ்சியான்
உணர்வு கூடினான்.

[நெடுங்கணை — நீண்ட கண்கள். கழன்ற புண் — கழன்றதால் தோன்றிய புண்கள். கடுத்து அழன்றன — கடுப்புக் கொண்டு எரிந்தன. அங்கம் செங்கண்கள் — உடம்பிலே செந்நிறக் கண்கள். தொழுத — தொழுதன. தொங்கலின்- மாலை போல. குழன்று எழும் குஞ்சியான் — சுருண்டு தோன்றுகிற மயிர் முடியையுடைய லட்சுமணன்.]

மருந்துக் காற்று வீசியதும் லட்சுமணனுடைய உடம்பிலே தைத்திருந்த அம்புகளெல்லாம் கழன்று போகின்றன. அந்தப் புண்களின் கடுப்பும் எரிச்சலும் இல்லாமல் குளிர வீசுகின்றது மருந்து மலைக் காற்று.

லட்சுமணனுடைய கண்கள் கோபத்தால் சிவந்து நோக்கும்போதே பிரமாஸ்திர அம்புகள் பளிச்சுப் பளிச்சென்று தைத்து அந்தப் பார்வையிலிருந்து ஒளியையும் உயிரையும் பறித்துக் கொண்டன. அதே கண்கள் இப்போது சுழலத் தொடங்குகின்றனவாம்.

சுருண்டு கிடந்த மயிர் முடியையும் அசைக்கிறது காற்று. அந்தத் தலையைத் தூக்கிக் கொண்டு லட்சுமணன் எழுகின்ற அதிசயம் கண்டு உலகங்களெல்லாம் தொழுகின்றனவாம்.

திருமால் யோக நித்திரை நீங்கி எழுவது போல் லட்சுமணன் எழுந்து நிற்கிறான். தேவர்கள் வாழ்த்தும் ஒலியுடன் உயிர் பெற்றெழுந்த வானர வீரர்களின் கோஷங்களையும் காதில் கேட்டுக் கொண்டே எழுந்து நிற்கிறான்.

விண்ணும் மண்ணும்
மகிழ்கின்றன!

தமையன் தம்பியைத் தழுவிக் கொள்கிறான். ராமன் துயர் நீங்கியதும் உலகம் முழுவதும் துயர் நீங்கியது போன்ற ஓர் உணர்ச்சியைப் பெறுகின்றதாம்.

ஓங்கிய தம்பியை
உயிர்வந்(து) உள்ளுற,
விங்கிய தோள்களால்
தழுவி, வெந்துயர்

நீங்கினன் இராமனும்;
உலகில் நின்றில
நீங்(கு); உள தேவரும்
மறுக்கம் சிந்தினர்.

[உயிர் வந்து உள்ளுற-உயிர் வந்து உள்ளே பொருந்த. வீங்கிய - பூரித்த. வெந்துயர் - கொடிய துயரம். உலகில் நின்றில நீங்கு - நீங்கும் உலகில் நிலை பெறாமல் போய் விடுகிறது. உள தேவரும்—உள்ள தேவர்களும்; சாவாமலிருக்கும் தேவர்களும். மறுக்கம் — கவலை.]

தேவர்களுடைய மகிழ்ச்சியையும் வென்று விடுகிறது தெய்வப் பெண்களின் மகிழ்ச்சி. இம்மகிழ்ச்சி நடனமாக வெளிப்படுகிறது; இசையாகப் பாடுகிறது; விழாவாகக் கொண்டாடப் படுகிறது :

அரம்பையர் ஆடினர் ;
அமுத ஏழிசை
நரம்(பு) இயல் கின்னரம்
முதல நன்மையே

நிரம்பின ; உலகெலாம்
உவகை நெய்விழாப்
பரம்பின ; முனிவரர்
வேதம் பாடினர்.

[அமுத ஏழிசை — அமுதம் போல் இனிமையான ஏழு இசை. நரம்பு இயல்- நரம்பினால் இயன்ற. கின்னரம் முதல- கின்னரம் முதலிய இசைக்கருவிகள். நன்மையே - நன்மையாக; இனிதாக. உலகெலாம் — உலகம் முழுவதும். உவகை நெய்விழா - உவகைக்கு அறிகுறியான நெய்யாடும் திருவிழா. பரம்பின — பரவின.]

காவியத்துள் ஒரு வீரகாவியம்

நன்றி கூறும் நற்கலை

பி. ஸ்ரீ

14

அனுமன் மருந்து கொண்டு வர அனைவரும் பிழைத்துக்கொண்ட நிகழ்ச்சி ராமனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தந்திருக்க வேண்டும்! எவ்வளவு பெருந் துயரத்திலிருந்தான்!—இப்போது அவ்வளவு துயரமும் மகிழ்ச்சியாகி விட்டது.

நட்புக் காதல்

ராமன் அனுமனைத் தழுவிக் கொள்கிறான். கண்ணீர் ததும்புகிறது'—தூய நட்புக் காதல் அப்படித் துளிக்கிறது, துலங்குகிறது. முத்து முத்தாக.

இந்த நட்புக் காதலில் கரைந்து போகின்றன நாயகன், பணியாளன் என்ற வேற்றுமைகளெல்லாம்.

ஆய காலையின்,
அமரர் ஆர்த்தெழத்,
தாயின் அன்பனைத்
தழுவி னன் தனி
நாய கன்,பெருந்
துயரம் நாமறத்
தூய காதல்நீர்
துளங்கு கண்ணினன்.

[ஆயகாலையின் - அப்போது. அமரர் ஆர்த்து எழ - தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து எழ. தாயின் அன்பனை-தாய்போல் அன்புடைய அனுமனை, தனி நாயகன் - ஒப்பற்ற தலைவனான ராமன். பெருந் துயரம் நாமற-பெருந் துயரம் நாமமும் அற்றதாய் ஒழிய; துயரம் என்ற பேரும் அற்று ஒழிந்து போய்விட்டது என்று சொல்லும்படி அப்பெருந் துயரம் இல்லாமற்போகவே. தூய காதல் — தூய காதலினால். நீர் துளங்கு — நீர் ததும்புகின்ற.]

இப்பொழுது ராமனுள்ளத்தில் எழுந்த தூய நட்புக் காதல் சீதை மீது ராமன் கொண்டிருக்கும் அந்தத் தூய காதலுக்குக் குறைந்ததில்லையாம். அப்படித் தழுவிக் கொள்கிறானும் ராமன்: அனுமனோ பெரும் பணிவுடன் தாழ்ந்து தொழுகின்றான்.

ராமனுடைய தூய பேரன்பையும் அனுமனுடைய தூய பெரும் பணிவையும் ஒருங்கே சித்தரிக்கும் தூயமாக் கவிதை இது:

எழுது குங்குமத்
திருவின் ஏந்துகோ(டு)
உழுத மார்பினல்,
உருகி உள்ளுறத்
தழுவி நிற்றலும்,
தாழ்ந்து தாளுறத்
தொழுத மாருதிக்(கு),
இனைய சொல்லுவான்.

[எழுது குங்குமத் திரு — குங்குமச் சாந்தத்தை எழுதிக் கொண்ட சீதா லட்சுமி. உள்ளுற - அழுந்த. தாளுறத் தொழுத — திருவடிகளில் பொருந்தப் பணிந்து வணங்கிய. மாருதிக்கு — அனுமனுக்கு.]

இப்படி அனுமனை ராமன் தழுவிக் கொண்டதும், 'இப்படியும் ஒரு சம்மானமா?' என்று ஆச்சரியமடைகிறோம். மலை கொணர்ந்ததைக் காட்டிலும் பெரு வியப்பு விளைக்கின்றது, அதற்கு ராமன் வழங்கும் இந்தச் சம்மானம்.

ரஸிகருள்ளம் வியக்கிறது; மருண்டு போகிறது, சீதையென்ற திருமகளுக்கே உரிய திருமார்பைக் கொடுத்தருளிய இந்தச் சம்மானம் கண்டு.

'இதைக் காட்டிலும் மேம்பட்ட நட்பும் உண்டோ?' என்ற பிரமிப்பை, தூய நல்லுணர்ச்சியை, அடைகிறோம்

எழுது குங்குமத்
திருவின்...

என்ற பாட்டை ஓதிஓதி உணரும் போது.

நன்றி கூறுதல்

இனி, ராமன் அனுமனுக்கு நன்றி செலுத்துகிறான். தழுவிக் கொண்ட இந்தச் சம்மானத்தைக் காட்டிலும் மேம்பட்ட ஒரு நன்றியும் பேச்சால் தெரிவிக்க முடியுமா ?

இதோ கேளுங்கள் ராமன் நன்றி கூறுவதை :


முன்னில் தோன்றினோர்
முறையின் நீங்கலா(து)
என்னில் தோன்றிய
துயரின் ஈறுசேர்
மன்னில் தோன்றினேம்
முன்வம்; மாண்டுளோம் ;
நின்னில் தோன்றினேம் ;
நெறியில் தோன்றினாய் !

[முன்னில் தோன்றினோர் — முன்னே எங்கள் குலத்தில் தோன்றியவர்கள் ; முன்னோர். முறையில் நீங்கலாது — முறையில் நீங்காமலிருந்து. என்னில் — என்னால். துயரின் — துயரினால்; ஈறு சேர் — மரணத்தை அடைந்த. மன்னில் — தசரத மன்னவனிடம். நின்னில் — உன்னிடமிருந்து. நெறியில் தோன்றினாய் — ஒழுக்கத்தி லிருந்து தோன்றியவனே.]

லட்சுமணனையும் சேர்த்துப் பேசுகிறான் ராமன். தசரத ராஜகுமாரர்கள் அல்லவா ? அந்தச் சக்கரவர்த்திக்குப் பிறந்தோம் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறான்.

சக்கரவர்த்தியைப் பற்றி மூன்று அடிகளில் பிரஸ்தாபிக்கிறான். சூரிய குலத்து முன்னோர்களெல்லாம் நீதியை வளர்த்து வந்தார்கள் ; தருமத்தை வளர்த்து வந்தார்கள். பொறுமை முதலான எத்தனையோ பண்புகளைப் போற்றி வளர்த்தார்கள். ஒவ்வொரு பரம்பரையும் முந்திய பரம்பரையைக் காட்டிலும் அதிக அளவில் பண்புச் செல்வத்தையும் பண்பாட்டையும் பெருக்கி வந்தது. அந்த முறையிலிருந்து சிறிதும் நீங்காமலிருந்து பண்பு — பண்பாடுகளுக்கு ஒரு சிகரமாய் நின்று நிலவினான் தசரத சக்கரவர்த்தி.

அந்தச் சக்கரவர்த்தி நோய் வாய்ப்பட்டு இறந்தானா ? 'என்னால் தோன்றிய துயரத்தால் இறந்தான்' என்கிறான் ராமன். 'அந்த முடியா முடி மன்னன் முடிந்தது என்னாலே !' என்கிறான். 'என் பிரிவுத் துயரத்திற்கு, தன் சத்தியத்திற்குப் பலியாகிவிட்டான்' என்கிறான்.



அந்தச் சக்கரவர்த்தியின் புதல்வர் நாங்கள் என்பதைத்தான்,

மன்னில் தோன்றினும்

என்று சொல்லிவிட்டு, 'ஆனால் அது முற் பிறப்பு' என்கிறான் :

மன்னில் தோன்றினும்
முன்னம் !

'அந்தப் பிறவி போய்விட்டது ; நாங்கள் மாண்டு போனோம்' என்கிறான் !

மன்னில் தோன்றினும்
முன்னம்; மாண்டுளோம் !

'அந்தப் பிறவி போய் இது மறு பிறப்பு' என்கிறான். அந்தப் பிறவியில் தசரத புத்திரர்கள் ; இந்தப் பிறவியிலோ,

நின்னில் தோன்றினும்

—அதாவது, அனுமனுக்குக் குழந்தைகளாய்ப் பிறந்தோம் என்கிறான்.

'சூரிய குலம் போய் வானர குலமா?' என்று திடுக்கிடச் செய்கிறது கவிஞனின் மனோ பாவம். தசரதனுக்காவது சூரியன் தொடக்கமாக ஒரு நீண்ட பரம்பரை வேண்டி யிருந்தது. அனுமனுக்கோ பரம்பரைப் பெருமையே தேவை யில்லையாம்.



'நெறியில் தோன்றினாய் !

என்றல்லவா குறிப்பிடுகிறான் ?

'ஒழுக்கம் உன்னைப் பெற்றது' என்கிறான். 'முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து' பெற்றதாம் அனுமனை நல்லொழுக்கம். இதற்கு மேல் எந்தச் சூரிய பரம்பரை தான் புகமொளி பரப்ப முடியும் ?

உலக இலக்கியப் பரப்பிலே நன்றி கூறுவதாக வரக்கூடிய எந்த வாக்கைத் தான் இதற்கு ஈடாகக் காட்ட முடியும்? இதைக் காட்டிலும் மேம்பட எந்தக் கவியாலும் பேச முடியுமோ ? இப்படியெல்லாம் அறிஞர்களும் ரஸிகர்களும் அறிந்து அறிந்து, ஆராய்ந்து ஆராய்ந்து மகிழ்ந்து, கொண்டாடும் கட்டம் இது.

ராமனுடைய குணசித்திரத்தைத் தான் எப்படிச் சோபையும் சுவையும் உடைய தாக்குகிறது இந்த ஒரு சிறு நிகழ்ச்சி ! கவிதை புனைவதைப் போல் குணசித்திரம் வனைவதிலும் கம்பனுக்கு உலக மகா கவிகளிடையே ஒரு முக்கிய ஸ்தானம் உரியது என்பது பேரறிஞர் வ. வே. சு. ஐயர் முதலானவர்களின் தேர்ந்த கருத்து. கம்பனுடைய ராமன் அவதாரமூர்த்தி யென்பதால் குணசித்திரம் பாதிக்கப் படவில்லை யென்பதற்கு இதுவும் ஒரு சான்று.

பேசாத நன்றி

இப்போது மருந்து கொணர்ந்து காவிய நாயகனின் தம்பி முதலானவர்களைக் காப்பாற்றிய அனுமன் இதற்கு முந்திய சுந்தர காண்டத்திலே சீதையைக் கண்டு பிடித்துக் கணையாழி கொடுத்துச் சூளாமணி பெற்று வந்த மகோபகாரத்தைச் செய்தவன்தான். ஆனால் அந்த உபகாரத்திற்கு ராமன் நன்றி கூறவேயில்லை !

திடுக்கிட வேண்டாம்; நன்றி கூறும் நற்கலையில் பேச்சுக்கும் இடமுண்டு; பேசாத பேச்சுக்கும் இடமுண்டு.

கண்டனென் கற்பினுக்(கு)
அணியை

என்றெல்லாம் அனுமன் தான் சீதையைக் கண்ட வரலாறு கூறிச் சூளாமணி கொடுத்து ராமனுக்கு நன்றி தெரிவிக்கும் நினைவே எழாமல் செய்துவிட்டான்.

சூளாமணியைப் பெற்றதும் ஒரே மகிழ்ச்சியில் இன்னது செய்வதென்றே தெரியாத நிலையில் காணப்பட்டான் ராமன். சுக்கிரீவன் தான் ராமனைத்

தூண்டித் துரிதப்படுத்தி வானர சேனையையும் விரைவுப் படுத்தினுன். அந்த மகிழ்ச்சிப் பெருக்கிலே நன்றி கூறுமலே கூறியதாகி விட்டது எனலாம்.

இப்போதுள்ள மகிழ்ச்சிப் பெருக்கிலோ அவ்வளவு வேகத்தில் காரியம் ஒன்றும் நடைபெறுவதற்கில்லை. எனவே ஆற அமர நன்றி கூற முடிகிறது.

காதலர்களுக்கிடையே கண்ணுேடு கண் பேசிக் கொண்டால் வாய்ச் சொல் தேவையில்லை என்று சொல்லுகிறுேமல்லவா? ராமனுக்கும் அனுமனுக்கும் இடையே நட்புக் காதலும் அப்படி வளர்ந்திருக்கிறது என்று சொல்லலாம்.

வித்தும் விளைவும்

சுந்தர காண்டத்திலே ராமன் பேசாத பேச்சால் நன்றி கூறினுனென்ருல், சீதை பேச்சினுலும் நன்றி தெரிவித்தாள் என்பதை அனைவரும் அறிவர். அந்தப் பேச்சிலே இப்போது ராமன் நன்றிகூறும் பண்பாட்டின் வித்தைக் காண்கிறோம்.

'உயிர் தந்தாய்' என்று சீதை அனுமனை நோக்கிச் சொன்னுள்.

அம்மையாய் அத்தனுய
அப்பனே!

என்றும் அனுமனைக் குறிப்பிட்டாள்,

சீதையின் நன்றியுரையையும், இங்கே இப்போது ராமன் கூறும் நன்றியுரையையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இரண்டு கட்டங்களிலும் கவித்வசக்தி உச்சநிலையில் காணப்படுகிறது.

நன்றி கூறுவது பண்பாடு மட்டுமல்ல; ஒரு நற்கலையும் கூட. சுந்தர காண்டத்தில் சீதை கூறும் பேச்சிலே நாம் காண்பது நன்றி கூறும் பண்பாட்டின் சிகரம்; இங்கே நாம் காண்பது நன்றி கூறும் நற்கலைச் சிகரம்.

அந்த நன்றியுரையில் சொல்லும் பொருளும் மலரும் மணமும் போல், மணியும் ஒளியும் போல் அமைந்திருக்கின்றன. இங்கே சொல்லால் பெற முடியாத பொருளின் ஒளியும் பரிமளமும் கலையுருவில் பொங்கக் காண்கிறோம்.

சுந்தர காண்டத்தின் வித்து இங்கே இப்படி விளைந்திருக்கிறது.

காவியத்துள் ஒரு வீரகாவியம்

ராவணன் கண்ட சதிர்க்கச்சேரி

பி.ஸ்ரீ

15

ஒரே சமயத்தில் ராம லட்சுமணர் முதலானவர்களும் ராவணன் முதலானவர்களும் மகிழ்ச்சி கொண்டாடுகிறார்கள் என்றால், அது ஓர் அதிசயம்தானே?

அனுமன் மருந்து கொணர்ந்ததால் புத்துயிர் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள் ராம லட்சுமணரும் வானர வீரரும். அரக்கர்களோ எதிரிகள் பிரமாஸ்திரத்தால் மாண்டார்களென்று மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

சதிரும் கதிரும்

ராவணன் ஒரு சதிர்க் கச்சேரிக்கே ஏற்பாடு செய்துவிட்டான். சதிராட்டம் களியாட்டமாகவும் நடைபெறுகின்றது; அவ்வளவு மகிழ்ச்சி - வெறி.

இன்ன(து)இத் தலைய-
நாக, இராவணன்
எழுந்து பொங்கித்

தன்னையும் கடந்து
நீண்ட உவகையன்,
சமைந்த கீதம்

கின்னரர் முதலோர்
பாட, முகத்திடைக்
கிடந்த கெண்டைக்

கன்னி நன் மயில்அன்-
னாரை நெடுங்களி-
யாட்டம் கண்டான்.

[இன்னது இத்தலையதாக - இவ்விடத்து ராமனுடைய சேனையில் நிகழ்ந்த செயல் இவ்வாறாக. உவகையன் - மகிழ்ச்சி உடையவனாகி, சமைத்த கீதம் - லட்சணப்படி அமைந்த கீதத்தை. முதலோர் - முதலானோர். முகத்திடை - முகத்தினிடம், கெண்டை - ஒரு வகை மீன்; (இங்கே) கெண்டை மீன் போன்ற கண்கள். கன்னி நன் மயில் அன்னாரை - இளம் பருவமுள்ள அழகிய மயிலை ஒத்த பெண்களை, களியாட்டம் - கள்ளுண்டு ஆடும் ஆட்டம்; கள்ளைப் பருகி ஆடும் சதிராட்டம்.]

தேவலோகத்துப் பெண்களும் வித்தியாதர மகளிரும் நாக கன்னியரும் யட்ச ஸ்திரீகளும் சித்தர் குலப் பெண்களும் அரக்கியர்களுடனும் அசுரப் பெண்களுடனும் கலந்து தோகை விரித்தாடும் மயிலின் கூட்டமும் மருளும்படி ஆடுகிறார்கள்.

சப்தஜாலம் காட்டும் இந்திரஜாலம்

மேனகையும் திலோத்தமையும் அரம்பையும் ஊர்வசியும் வேறு தெய்வப் பெண்களும் சதங்கை ஒலிக்கக் கீதவாத்திய விநோதங்களுக்கிடையே ஆடிக் கொண்டு வருவதைப் பாருங்கள்:

மேனகை, இலங்கு
வாட்கண் திலோத்தமை,
அரம்பை, மெல்லென்

தேனகு மழலை
இன்சொல் உருப்பசி
முதல தெய்வ

வானக மகளிர்
வந்தார், சில்லரிச்
சதங்கை பம்ப,

ஆனக முரசம்
சங்கம் முருட்டொடும்
இரட்ட ஆடி.

[இலங்கு - விளங்குகின்ற. வாட்கண் - வாள்போன்ற கண்கள். தேன் நகு - தேன்போல விளங்குகின்ற. மெல்லென் மழலை இன் சொல் - மெல்லியவான முற்றாத இன் சொற்கள். உருப்பசி - ஊர்வசி. வானக மகளிர் - வானுலகத்துப்



பெண்கள். சில அரிச் சதங்கை சில பருக்கைக் கற்களையுடைய சதங்கை. பம்ப - ஒலிக்க. ஆனக முரசம் - ஆனகம் என்று சொல்லப்படுகிற முரசு. முருட்டொடு - முருடு என்ற வாத்தியத்துடன். இரட்ட - ஒலிக்க]

இந்தப் பாட்டின் சப்த ஜாலமே நர்த்தனம் செய்துகொண்டு வரும் பெண்களின் சதங்கை ஒலிகளை நினைவூட்டுகிறது.

இனி இப்பாட்டின் ஓசையின்பத்தைத் தான் அனுபவித்துப் பாருங்கள் :

தோடுண்ட சுருளும்,
தூங்கும் குழைகளும்,
சுருளில் தோன்றும்
ஏடுண்ட பசும்பொற்-
பூவும், திலதமும்
இலவச் செவ்வாய்

மூடுண்ட முறுவல்
முத்தும், முள்ளுண்ட
முளரிச் செங்கண்-

காடுண்டு புகுந்த
தென்ன முனிந்தது
கறைவெண் திங்கள்.

[தோடுண்ட சுருளும் - பனந்தோட்டி ஞல் இயன்றதுபோல் பொன்ஞல் செய்த சுருள் என்னும் நகையும். தூங்கும் குழை களும் - தொங்குகின்ற காதணிகளும். ஏடுண்ட—இதழ் பொருந்திய. இலவச் செவ்வாய் - இலவம்பூவைப் போன்ற சிவந்த வாய். மூடுண்ட—மூடப்பெற்ற. முறுவல் முத்தும்-புன்சிரிப்புச் செய்கின்ற முத்துப் போன்ற பற்களும். முள்ளுண்ட முளரி - முள்ளையுடைய தாமரை மலர். காடு - கூந்தலாகிய காடு. முனிந்தது - கோபித்தது. கறைவெண் திங்கள் - கறையோடு கூடிய சந்திரன்.]

இப் பெண்களின் புன்னகையால், நகைகளின் ஒளியால், விளக்கையும் விளங்கச் செய்யும் மேனி ஒளியால் அறிவும் மருண்டு போகிறதாம்:

முளைக்கொழுங் கதிரின்
கற்றை முறுவல்வெண்-
ணிலவும், மூரி

ஒளிப்பிழம்(பு) ஒழுகும்
பூணின் உமிழ்இள
வெயிலும், ஒண்பொன்

விளக்கையும் விளக்கும்
மேனி மிளிர்கதிர்ப்
பரப்பும் வீச,

வளைத்தபே ரிருளும்
கண்டோர் அறிவென
மருளும் மாதோ!

[முளைக்கொழுங் கதிரின் கற்றை - முளைத்துத் தோன்றுவது போன்ற



கொழுங் கிரணத் தொகுதி: மூரி ஒளிப் பிழம்பு மிக்க ஒளித் திரட்சி. கதிர்ப் பரப்பும் — ஒளித் தொகுதியும்.]

கள்ளோ ? கலையோ ?

சதிராட்டமே அறிவை மருளச் செய்கிற தென்றால், கள்ளின் வேகமும் கலந்து கொண்ட போது, மயக்கத்தைச் சொல்லவா வேண்டும் ?

அழுவோரும் சிரிப்போரும் பாடி ஆடுவோருமாய்க் காணப்படுகிறது கூட்டம். சிலர் பக்கத்தில் நின்றவரைத் தொழுகிறார்களாம். கள்ளால் விளைந்த பக்தி இது ! சிலர் துள்ளிச் சோர்ந்து போகிறார்கள். சிலர் துயில்கிறார்கள். தளர்ந்து தளர்ந்து ஒருவர் மேல் ஒருவர் புதந்து படிவதையும் காண்கிறோம்.

மயக்கத்திற்கு மருந்து

இப்படியெல்லாம் சதிராட்டமும் களியாட்டமும் நடை பெறுவதை ராவணன் பார்த்துக் கொண்டிருக்கிறான். பகைவர்கள் மாண்டொழிந்தார்கள் என்ற மகிழ்ச்சியால் எத்தனையோ முழம் உயர்ந்து விட்டது ராவண காம்பீர்யம்.

இந்த நிலையில் தான் மருந்தினால் உயிர் பெற்று எழுந்த குரங்குச் சேனை சமுத்திரம் போல் ஆரவாரிப்பது காதில் வந்து விழுகிறது.

ஆடல் பாடல்களெல்லாம் இப்போது எப்படி யிருக்கின்றன ? ஆடலில் ஈடுபட்ட அழகிகள் ஆடிக் கொண்டுதானிருக்கிறார்கள். பாட்டும் அமுதம்போல் இசைத்துக் கொண்டுதானிருக்கிறது. மிருதங்க ஒலி அருமையாகத்தானிருக்கிறது. ஆனால் வானரங்களின் ஆர்ப்பொலி கேட்டதும் ..?

இந்தக் கச்சேரியில் காதல்-காட்சிகளுக்கும் குறைவில்லை. காதலர்-கலகமாகிய ஊடலுக்கும் குறைவில்லை. ஊடல் கொண்டவர்கள் இரக்கம் கொண்டு கடைக் கண்ணால் பார்க்கவும் செய்கிறார்கள். மழலைச் சொற்களால் கொடிய வார்த்தைகளையும் வழங்குகிறார்கள்.

ஆனால் இவையெல்லாம் வானரங்களின் ஆரவாரத்தால் எப்படி ஆகிவிடுகின்றன ;

ஆடலும், களிப்பின்
வந்த அமலையும்,
அமுதின் ஆன்ற
பாடலும், முழவின்
தெய்வப் பாணியும்,
பவள வாயார்

ஊடலும், கடைக்கண்-
நோக்கும், மழலைவெவ்-
வுரையும் எல்லாம்

வாடல்மென் மலரே
ஒத்த, ஆர்ப்பொலி
வருத லோடும்.

ஆடலும் பாடலும் இசை விநோதங்களும் ஊடலும் காதல் நோக்கும் பேச்சும் எல்லாம் வாடிய மென்மலர் போலாகி விட்டனவாம். வாடிப்போன பூவைச் சூடி மகிழ்வதுண்டோ ? வீசி யெறிந்து விடத்தானே தோன்றும் ?

வானரர்களின் ஆர்ப்பொலியுடன் ராம லட்சுமணரின் வில் நாணொலியும் காதில் வந்து விழுகிறது :

செறிகழல் இருவர்
தெய்வச் சிலைஒலி
பிறந்த தன்றே !

[செறிகழல் இருவர்-நெருங்கிய வீரக் கழலை அணிந்த ராமலட்சுமணர். தெய்வச் சிலை ஒலி — தெய்வத் தன்மையுள்ள விற்களின் நாணோசை.]

இப்போது சதிராடும் சுந்தரிகளின் முகங்கள் எப்படித் தோன்றுகின்றன பரம ரஸிகனான ராவணனுக்கு ?

முத்தம்வாள் நகைக்குத்
தோற்கும் முகத்தியர்,
முழுக்கண் வேலால்

குத்துவார் கூட்டம்
எல்லாம் வானரக்
குழுவில் தோன்ற...

வானரர் ஆர்ப்பொலி கேட்டதும் ஆடல் பாடல்களெல்லாம் வாடல்மென் மலரே ஒத்தன என்றால் இருவர் வில் நாண் ஒலியும் கேட்டபின் சதிராடும் பெண்கள் பெண்களாகவா தோன்றுகிறார்கள் ? அங்கே ஆர்ப்பொலி செய்து கொண்டிருந்த அந்தக் குரங்குக் கூட்டமே இங்கும் இப்படி வந்து ஆட்டம் போடுகிறதோ என்றே பிரமித்துப் போகிறான் ராவணன்.

'வாடல்மென் மலரே ஒத்த' என்றும் 'வானரக் குழுவில் தோன்ற' என்றும் சொல்லி இரண்டு உவமைகளால் சதிராட்டத்தில் ராவணனுக்குத் தோன்றிய வெறுப்பை வெளியிடும் கவித் திறனைப் பாருங்கள்.

காவியத்துள் ஒரு வீரகாவியம்

என்ன மாயம் இது!

பிரபு

16

சதிர் ஒரு புதிராகி விட்டது. எதிரிகள் செத்துப் போய்விட்டதாகத் தானே எண்ணிக் கொண்டிருக்கிறான்? பேயாகி அலறுகிறார்களா இந்த நட்ட நடுநிசியிலே? இது என்ன மாயம்?

ராவணனுடைய பூமாலை மீது வண்டுகள் ஏறிப் போகின்றன. இந்த வண்டுகளுக்குத் தான் என்ன தைரியம் இப்போது? இனி நண்டுகளும் படையெடுக்குமோ?

எதிரி க்ஷேமம்!

மாலை அசைகிறது; வண்டுகள் பறக்கின்றன. பறந்த வண்டுகள் பயந்து போய் விடுகின்றனவா? காதில் வந்து ஊதுகின்றன. ஓதுகின்றன 'பகைவர் க்ஷேமம்' என்ற செய்தியை,

ராவண தூதர்களே மாய வண்டுகளாகி வந்து செய்தி சொல்லுகிறார்களாம். எதிரிகளின் க்ஷேமம் சதிர்க் கச்சேரியில் பகிரங்கமாகச் சக்கரவர்த்தியின் திருச்செவி சாற்றக் கூடியதா, என்ன?

தூதர்கள் என்ன சொல்லுகிறார்கள்? ராவணன் உடனே என்ன செய்கிறான்? சதிராட்டம் எப்படி முடிகிறது?

'தீதிலர் பகைஞர்'
என்னத் திக்கென்ற
மனத்தன் தெய்வப்
போ(து)உகு பந்தர்
நின்று, மந்திரத்(து)
இருக்கை புக்கான்.

[திக்கென்ற — திடுக்கிட்ட. தெய்வப் போது—கற்பக மலர்கள். உகு — சிந்தியுள்ள. பந்தர் நின்று — சதிர்க் கச்சேரி நடக்கும் பந்தலை விட்டு. மந்திரத்து இருக்கை - மந்திராலோசனை மன்றம்.]

மந்திராலோசனை

சதிர்க் கச்சேரியை அப்படியே விட்டு விட்டு மந்திராலோசனை மன்றத்திற்கு வந்து விடுகிறான் ராவணன். செய்தி கேட்டு இந்திரஜித்தும் வந்துவிடுகிறான்.

மகோதரன் முதலியவர்களும் வருகிறார்கள். சேனைத் தலைவர்கள் வருகிறார்கள். ராட்சஸ முதியவர்கள்—ஆண்டிலும் அறிவிலும் பழுத்த அனுபவப் பழங்கள்—வருகிறார்கள்.

ஒதுங்கி மரியாதையாக நின்ற அவர்களை யெல்லாம் நெருங்கி வந்திருக்கும்படி ஏவுகிறான் ராவணன். தோளோடு தோளிடித்துச் செய்யும் போரிலும், நெருக்கடியான சமயங்களில் மூளையோடு மூளையிடித்துப் புரியும் ஆலோசனையிலும் தூரம் சமீபமாகி விடுகிறது; உயர்வு தாழ்வு என்ற மேடு பள்ளங்கள் சம நிலமாகின்றன.

'இது என்ன மாயம்?' என்று ராவணனே நேர்ந்துள்ள துன்பங்களைக் குறிப்பிடுகிறான். உடனே முதியவருள் முதியவனான மாலியவான் வழக்கம் போல் இதோபதேசம் செய்யத் தொடங்குகிறான்.

மாலி பேச்சு

மருத்து மலை கொண்டுவந்து பிழைப்பித்தவன் அனுமனே என்பதை அறிவித்து, 'அவன் மகாமேரு மலையைக் கொண்டு வந்து லங்காபுரியில் நம் தலைமேல் போட்டு விட்டால், நாம் என்ன செய்ய முடியும்?' என்று கேட்கிறான்.

அனும பராக்கிரமத்திலே ஈடுபட்ட உள்ளத்துடன் மாலியவான், 'பிரமன் விஷ்ணு சிவன் என்று இறைவர்களை இனி மூவராகப் பேசுவது கூடப் பிசகு; இந்த வானர மூர்த்தியையும் சேர்த்து, இனி நால்வரே முதல்வர்!' என்கிறான்.

'இப்போதாவது ஜானகியை முறைப்படி ராமனிடம் சேர்த்து அடைக்கலம் அடைவோம்; தர்ம மூர்த்திகள் காப்பாற்றுவார்கள்!' என்கிறான்;

அறம்தரு சிந்தை
யோரை அடைக்கலம்
புகுதும் ஐய!

[புகுதும் — புகுவோம்.]

யானைக்குச் சிம்ம சொப்பனம் போல் இருந்தானும் வாலி ராவணனுக்கு, 'அந்த வாலி எங்கே இப்போது?' என்று மாலி கேட்கிறான்.

சமுத்திரத்தையே இயற்கைப் பேரகழி யாகக் கொண்டது இலங்கை. இந்தக் கடலகழியும் வெல்லப்பட்டதல்லவா? மலை போலிருந்த கும்பகர்ணனைத் தான் இப்போது காண முடிகிறதா?

இப்படியெல்லாம் பேசி வரும் மாலி 'ராட்சஸத் தோற்றமும் ஆற்றலும் எல்லாம் நீர் மேல் குமிழி; நீயும் ஒரு பெருங்குமிழிதான்!' என்கிறான்:

வாலியை வாளி
ஒன்றால் வானிடை
வைத்து, வாரி
வேலையை வென்று,
கும்ப கருணனை
விட்டி னானை
ஆவியின் மொக்குள்
அன்ன அரக்கரோ
அமரின் வெல்வார்?
சூலியைப் பொருப்பி
னோடும் தூக்கிய
விசயத் தோளராய்!

[வாளி—அம்பு, வாரி வேலை—நீர் நிறைந்த சமுத்திரத்தை. வென்று—அணை கட்டி வென்று. வீட்டினானை—ஒழித்த ராமனை. ஆவியின் மொக்குள் அன்ன—நீரில் தோன்றும் குமிழி போன்ற, அமரின்—போரில். சூலியை—சூலப்படை கொண்ட சிவபெருமானை. பொருப்பினோடும்—மலையோடும்.]

ஸாக்ஷாத் பரமேசுவரனையே வெள்ளியங்கிரியோடு தூக்கிய விஜயம் குறித்து ராவணேச்வரன் செருக்குற்றிருக்கிறானல்லவா? அந்தச் செருக்கே ராமனைப் போன்ற மனிதனை இகழவும் தூண்டுகிறதென்று கருதும் மாலியவான் 'அந்த விஜயமும் நீர் மேல் குமிழிதான்; பெரு வெள்ளத்தில் ஒரு பெரும் பெருங்குமிழி என்று வேணுமானால் வைத்துக்கொள்' என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறான்.

'கடலைக் குடிப்போம்! மண்ணோடு விண்ணையும் பறித்து விடுவோம்!' என்றெல்லாம் சலசலத்துப் படைக் கலங்களைக் கிலுகிலுத்துக் கொண்டிருந்த அரக்கர்களெல்லாம் எங்கே? அவர்கள் ஓசைப் படுத்திக் கொண்டிருந்த இட



மெல்லாம் இன்று ஒப்பாரி வைக்கும் ஓசைதானே!'

இப்படிப் பேசும் மாலி ராவணனை நோக்கி 'இன்று மிஞ்சியிருப்பவர் நீயும் சிறுவனும் ஊரும் தானே!' என்று கூறி முடிக்கிறான். (இந்திரஜித்தை இப்படிச் சிறுவன் என்று வேறு யாரே குறிப்பிட முடியும்?)

'மறிகடல் குடித்து,
வானை மண்ணொடும்
பறிக்க வல்ல

எறிபடை அரக்க
ரெல்லாம் இறந்தனர்;
இலங்கை
யூரும்

சிறுவனும் நீயும்
அல்லால் யார் உளர்
ஒருவர் தீர்ந்தார்?

வெறிதுநம் வென்றி'
என்றான் மாலி,மேல்
விளைவ(து) ஓர்வான்.

[மறிகடல்—அலை மடங்கி விழும் கடல். எறி படை—வீசுகின்ற படைக்கலங்கள். சிறுவன்— (இங்கே) இந்திரஜித்து, தீர்ந்தார்—தப்பிப் பிழைத்தவர். வெறிது—



வெறும் பேச்சு, விளைவது ஓர்வான்-மேல் வருவதை ஆராய்ந்து அறிபவன்.]

ஏற்கெனவே இதோபதேசம் செய்து செய்து எல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதியது போலாகி விட்டதை உணர்ந்திருப்பவன் மாலியவான். இப்போது கடுமையாகவே பேசுகிருன், 'தேள் கொட்டுவது போல் வார்த்தை கொட்டுகிறது' என்று சொல்லும்படி.

இது கேட்டதும், ராவணன் பதில் சிரித்தலும் சினத்தலும் தான்; பிறகு தான் பேச்சு:

என்றுமா லியவான்
கூறப் பிறை எயிற்(று)
எழிலி நாப்பண்
மின்திரிந் தென்ன
நக்கு, வெருவர
உரப்பிப், பேழ்வாய்
ஒன்றினென்(று) அசனி
யென்ன உருத்து, 'நீ
உரைத்த மாற்றம்
நன்று நன்(று)!' என்று
சீறி உரைத்தனன்
நலத்தை ஓரான்.

[பிறை எயிறு — பிறைச் சந்திரன் போன்ற கோரப் பற்கள். எழிலி — மேகம். நாப்பண் — இடையே. நக்கு — சிரித்து வெருவர உரப்பி — பயம் உண்டாகும்படி அதட்டி. பேழ் வாய்—பிளவு பட்ட வாய். அசனி யென்ன—இடி யென்னும்படி. உருத்து—கோபித்து. நலத்தை ஓரான்—தன்னுடைய நன்மையை ஆராய்ந்து அறிய முடியாத ராவணன்.]

இருண்ட கோர முகத்தினிடையே மின்னல் திரிவது போலச் சிரிப்பு வருகிறது. கோபச் சிரிப்பு, கோரச் சிரிப்பு, சீறிச் சினந்து சிரிக்கும் இந்தச் சிரிப்பிற்குப் பின் வீர வாதம் பேசுகிருன். 'மைந்தன் என்ன, மற்றையோர் என்ன, உயிர் தப்பி வாழ விரும்புவோரெல்லாம் பிழைத்துப் போகட்டும்; நான் ஒருவனே எதிரிகளைத் தீர்த்து விடுவேன்!' என்கிருன்.

'சிறுவனும் நீயும் தப்பிப் பிழைத்திருக்கிறீர்கள்' என்று சொன்ன பாட்டனை நோக்கி, 'அந்தச் சிறுவனும் நீயும் மற்றையோரும் ஓடி உயிர் தப்பி வாழ இஷ்டப் பட்டால் போய் விடலாம்; திறந்த கதவு தான் இங்கே' என்று சொல்லித் தீர்த்து விடுகிருன்.

அநாவசியமாக இந்திரஜித்தையும் இப்படிச் சேர்த்துப் பேசும் கொடிய கோபத்தைத் தான் பாருங்கள்.

கிழவனைப் போகவிட வேணுமென்று கொதித்தெழுந்த கோபத் தீ ஒரு காரணமும் இல்லாமல் அருமை மைந்தனுகிய இந்திரஜித்தையும் சுடப் பார்க்கிறது! கோபத்திற்குப் புண் என்றும், கண் என்றும் தெரியுமா?

இத்தகைய கோபப் பேச்சையும், இதனுல் சற்றும் பாதிக்கப்படாமல் தந்தைக்கு ஆறுதல் கூறத் தொடங்கும் ராஜ பக்தியுள்ள மைந்தனுடைய நிலையையும் பாருங்கள்:

'மைந்தன்என்? மற்றை—
யோர்என்? அஞ்சினிர்
வாழ்க்கை வேட்டீர்!
உய்ந்துநீர் போவிர்;
நாளை ஊழிவெந்
தீயின் ஓங்கிச்
சிந்தினன், மனித
ரோடு குரங்கினைத்
தீர்ப்பன்' என்றுன்
வெந்திறல் அரக்கர்
வேந்தன்; மகன்இவை
விளம்ப லுற்றுன்.

[ஊழி வெந்தீயின் — கொடிய ஊழித் தீப்போல. சிந்தினன்-அந்தக் கோபத் தீயை வாரிச் சிந்தினவனுய். வெந்திறல்—கொடிய திறமை.]

தந்தை பெருங் கோபத்திலே தன்னையும் உயிர் தப்ப விரும்புவோருடன் சேர்த்துப் பேசியதையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் இந்திரஜித்து 'நிகும்பலையில் வேள்வி முடித்தால் உன் மனத் துயர் தீரும்' என்கிருன்.

ராவணன் உடனே உடன் படுகிருன், கடலில் மூழ்குகிறவன் எந்தப் பொருளையும் பற்றிக் கொள்ளப் பார்ப்பது போல.

''ஆனுல் உன் தம்பி விபீஷணன் இருக்கிருனே, அந்தத் துரோகி உளவு சொல்லிக் காரியத்தைக் கெடுத்து விடுவானே!'' என்று இந்திரஜித்து மறுபடியும் சொல்லுகிருன். 'ஆம்; அதற்கு நாம் என்ன செய்யலாம்?' என்று குழந்தைபோலக் கேட்கிருன் ராவணன்.

'அதற்கும் ஓர் உபாயம் இருக்கிறது; ஒரு மாயம் செய்வேன்' என்கிருன் இந்திரஜித்து.

'என்ன மாயம் இது?' என்று பிரமிக்கக் கூடிய மாயம் அல்ல அது; மாயம் என்றே தெரிந்து கொள்ளாமல் எதிரிகளைத் தவிக்கச் செய்யும் மாயம் அது!

காவியத்துள் ஒரு வீரகாவியம்

சூழ்ச்சி வெளிப்படுகிறது

பி.ஸ்ரீ

17.

அனுமன் கண் முன்னே சீதையை இந்திரஜித்து வாளால் கொன்று விடுவானும்; உடனே பெருஞ் சேனையுடன் அயோத்தி மீது படை யெடுப்பானும். இந்த இரண்டு பயங்கர நிகழ்ச்சிகளையும் அறிந்து கொண்டபின் எதிரிகள் செய்வ தொன்றும் தோன்றாமலே துன்பம் அடைவார்களாம். இது இந்திரஜித்தின் மந்திராலோசனை.

பொல்லாத சூழ்ச்சி

இவ்வளவு பைத்தியக்காரனா இந்திரஜித்து?' என்று ராவணன் திகைப் படையக் கூடுமல்லவா? இலங்கையிலே, 'இருப்பதா? இறப்பதா?' என்ற வகையில் ஓர் இறுதிப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, இங்குள்ள சேனைகளெல்லாம் இந்தப் போராட்டத்திற்கே தேவையாக இருக்கும்போது, இந்திரஜித்து அதி தூரத்திலுள்ள அயோத்தி மீது படை கொண்டு செல்ல முடியுமா?

சீதையை அனுமன் முன் கொல்வது தான் சாத்தியமா? இந்த ஆலோசனையை ராவணன்தான் ஒப்புக்கொள்ள முடியுமா? தந்தையின் நிலையையோ, எதிரிகளின் நிலையையோ உய்த்துணரவும் இந்திரஜித்துக்கு ஆற்றல் இல்லையா?

இந்திரஜித்து பைத்தியக்காரன் அல்லன். சீதையை அல்ல, மாயா சீதையைத்தான் கொல்வதாகச் சொல்லுகிறான் இந்திரஜித்து. அந்த ஜானகி உருவத்தை அனுமன் கண் முன்பும் மாயமாக விரைந்து கொல்லக் கூடிய ஆற்றல் இந்திரஜித்துக்கு உண்டு என்பதை ராவணன் அறிவான். அப்படியே படை யெடுப்பும் மாயப் படையெடுப்பேதான்!

'சீதையோ மாண்டாள்; இனி இங்கே வென்று பெறக்கூடிய பயன் ஒன்றும் இல்லை. அங்கே அயோத்தியில் 'தம்பிமார்களையும் தாய்மார்களையும் காப்பாற்றும் முயற்சியிலாவது ஈடுபடலாமே!' என்று எதிரிகள் தீர்மானிப்பார்களாம். இப்படி இந்திரஜித்து சொன்னதும், மந்திராலோசனை பயன் அளிக்கக் கூடியதுதான் என்று ராவணன் கருதியதில் தவறு இல்லை.

மேலும் சொன்னான் இந்திரஜித்து; 'அயோத்திக்கு அவர்கள் போகவில்லை என்றே வைத்துக் கொண்டாலும் அங்கே என் படை யெடுப்பின் பயனாக நிகழ்வது என்ன என்பதையாவது அறிந்து கொள்ள விரும்ப மாட்டார்களா? அதற்காக அனுமனைத் தானே அனுப்பி வைக்க முடியும்? அனுமனை இங்கே சொற்ப காலம் இல்லாமல் செய்து விட்டாலும் என் வேள்விக் காரியம் முடிந்து போகுமே. அந்த நிகும்பலை யாகம் முடிந்ததும் அதன் பயனாகப் பெற்ற புதிய சக்தியுடன் நான் விரைவில் பகைவரைக் கொன்று வெற்றி அடைவேன்!'

இதுவும் பொருத்தமாகவே தோன்றியது ராவணனுக்கு.

'ஏகிய கருமம்
முற்றி யான்அவண்
விரைவின் எய்தி

வேகவெம் படையிற்
கொன்று தருகுவன்
வென்றி!' என்றான்.

[ஏகிய— நான் சென்ற. கருமம்-வேள்விக் காரியத்தை. முற்றி—முடித்துக் கொண்டு. அவண்-அங்கு. வேகவெம் படையிற் கொன்று-வேகமுள்ள கொடிய படைக்கலத்தால் எதிரிகளைக் கொன்று. தருகுவன் வென்றி-வெற்றியைத் தருவேன்.]

'அப்படியே செய்வாய் மகனே! அது நல்லது' என்று ராவணன் உடன்

படவே, பொல்லாத சூழ்ச்சிக்காரனும் சீதையின் மாயப் பொன்னுரு அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளப் போய் விடுகிறான். ராவணனும் மந்திராலோசனை மன்றத்திலிருந்து திருப்தியுடன் எழுந்து போகிறான்.

சூழ்ச்சியின் சூழ்நிலை

ஆனால் முன் இல்லாத வெப்பம் இந்த இலங்கையில் ?ஏன் சோலைப் பற



வைகள் கூட்டம் கூட்டமாக ஆகாசத்தில் பறந்து அப்படிக் கத்துவதற்குக் காரணம் என்ன? அரக்கர்கள் ஏன் இப்படி நடுங்குகிறார்கள்? அது என்ன ஆரவாரம்?

வானரங்கள் 'இலங்கையைச் சுட்டெரிப்போம்' என்று கொள்ளிக் கட்டைகளுடன் கிளம்பி விட்டன. மருத்து மலையை வைத்து விட்டு அனுமனும் திரும்பி வந்து ஆரவாரிக்கிறான்.

ஆரவாரம் செய்து கொண்டே அனுமன் மேற்குத் திக்கு வாசலுக்கு வந்து விடுகிறான். அங்கே இந்திரஜித்தையும் பார்த்து விடுகிறான்.

என்ன விபரீதம்! சீதைக்கும் இந்தக் கதியா? கூந்தலைப் பற்றி இழுத்து வருகிறான்; கையிலே வாள். இந்திரஜித்து பேசுகிறான்:

'வந்(து) இவள் காரண
மாக மலைந்தீர்;

எந்தை இகழ்ந்தவன்;
யான் இவள் ஆவி

சிந்துவன்' என்று
செறுத்(து)உரை செய்தான்;

அந்தமில் மாருதி
அஞ்சி அயர்ந்தான்.

[மலைந்தீர் - போர் செய்தீர்கள். எந்தை - என் தந்தை. ஆவி சிந்துவன் - உயிரை அழிப்பேன். செறுத்து - கோபித்து. அந்தமில் மாருதி - சிரஞ்சீவியான அனுமன். அயர்ந்தான் - உளம் தளர்ந்தான்.]

அனுமனுக்கு வாய் உலர்ந்து ஆவியும் உலர்ந்து போகுமோ என்ற நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் இன்னது தான் செய்வது என்ற அறிவுத் தெளிவும் வற்றி உலர்ந்து போகிறது. இத்தகைய மாபாவியிடத்திலும் நீதி உரைத்துப் பார்க்கிறான்!

முகஸ்துதி செய்தும் நீதியை அந்த நெஞ்சில் நிறுத்திச் சீதை உயிரை எப்படியாவது காப்பாற்றி விடுவோம் என்று நடுங்கிக் கொண்டே பேசுகிறான்:

மண் குலைகின்றது;
வானம் நடுங்கிக்

கண் குலைகின்றது;
காணுதி கண்ணால்;

எண் குலைகின்றது;
இரங்கல் துறந்தாய்!

பெண்கொலை செய்தல்
பெரும்பழி அன்றோ?

[காணுதி - காண்பாய். எண் - எண்ணம். இரங்கல் - இரக்கம். துறந்தாய் - துறந்தவனே.]

நாக்கு நடுங்க அனுமன் பேசும் பேச்சு இது. அபூர்வமான கவிதை.

இந்திரஜித்தோ எப்படியாவது தந்தையையும் ஊரையும் காப்பாற்றித் தானே ஆகவேண்டும் என்கிறான். 'அயோத்தியையும் போய் எரித்து விடுவேன்' என்கிறான்.

வானரர்கள் கொள்ளிக் கட்டைகளை வீசி இலங்கையை எரிக்க முயல்வது போலவும், அனுமன் ஏற்கெனவே இலங்கையூரைக் கொளுத்தியது போலவும் இந்திரஜித்தும் அயோத்தியை எரித்துவிடப் போவதாகப் பயமுறுத்துகிறான்.

ராமனுடைய தம்பியரும் தாய்மார்களும் தன் கை அம்புக்குத் தப்பப்போவதில்லை என்கிறான். இப்பொழுதே வேகமாகப் புஷ்பக விமானத்தில் புறப்படுவதாகச் சொல்லுகிறான்.

நெருப்பைக் கக்கும் அம்புகள் படுவேகமாக அயோத்தியில் வேலை செய்யப் போகின்றன என்பதைத் தான்,



வெம்பு கடுங்கனல்
விசிடும் என்கை

அம்புக ளோடும்
அவிந்தன ரம்மா !

[மெம்பு - சினந்து சீறுகின்ற.]
என்று, அதை நடந்து முடிந்துபோன ஒரு நிகழ்ச்சியாகக் குறிப்பிடுகிறான்.

'இவ்வளவு வேகத்தில் அயோத்தியிலும் கொலைகள் நடந்து விடும் என்று ஆத்திரமாய்ப் பேசுகிறவன், அனுமன் சொல்லைக் கேட்டுப் பெண் கொலை முயற்சியில் தாமதம்தான் செய்ய முடியுமா? 'அருள் செய்வாய்; அருள் செய்வாய்' என்று நடுங்கி ஏங்கி அலறி உயிர்ப் பிச்சை கேட்டும் பெண்ணை வெட்டித் தள்ளுகிறான் ஒரே வீச்சில். உடனே பெருங்கடல் போன்ற படையுடன் வடக்கு நோக்கி நிமிர்ந்தெழுகிறான்.

படுவேகமாய் நிகழும் இரண்டு பயங்கர நிகழ்ச்சிகளை இதோ பாருங்கள், இந்தக் கவிதைக் கண்ணாடியில்;

'ஆளுடை யாய்! அரு
ளாய்,அரு ளாய்'என்(று)

ஏழை வழங்குறு
சொல்லின் இரங்கான்,

வாளின் எறிந்தவன்;
மாகடல் போலும்

நீளுறு சேனையி —
னோடு நிமிர்ந்தான்.

[ஆளுடையாய் - என்னை அடிமையாக உடையவனே. ஏழை (இங்கே) சீதை. வழங்குறு - வழங்குகிற; இரந்து சொல்லுகிற. இரங்கான் - இரங்காதவனாய். வாளின் எறிந்தனன்.—வாளால் வெட்டியெறிந்தான். மாகடல் போலும் — பெரிய கடல் போலும். நீளுறு சேனையினோடு — நீண்ட சேனையுடனே.]

அனுமன் அப்படியே மூர்ச்சித்து உயிரொடுங்கி மலை போல் கீழே விழுந்து விடுகிறான்; நெஞ்சு சுருண்டு கிடக்கிறான். மூர்ச்சை தெளிந் தெழுந்ததும் பலவாறு புலம்புகிறான்.

இந்திரஜித்தோ அயோத்திக்குப் போவதாகச் சொல்லி நிகும்பலை போய்ச் சேர்ந்து தன் வேள்வி முயற்சியில் ஈடுபடுகிறான். அனுமனோ,

முடிந்தது நம்தம்
எண்ணம்; மூவுல —
கிற்றும் கங்குல்

விடிந்தது என்றிருந்தேன்;
மீள வெந்துயர்
இருளின் வெள்ளம்

படிந்தது; வினையச்
செய்கை பயந்தது;
பாவி வாளால்

தடிந்தனன் திருவை
அந்தோ! தவிர்ந்தது
தருமம் அம்மா!

[கங்குல் - இரவு. வினையச் செய்கை - வஞ்சகச் செய்கை. பயந்தது—பலித்தது. தடிந்தனன்—வெட்டி விட்டான். தவிர்ந்தது தருமம் அம்மா — தருமம் நீங்கி விட்டதே.]

என்று புலம்புகிறான்.

அனுமன் ராமனை அடைந்து செய்தி தெரிவித்ததும், ராமனுடைய துயரத்தைச் சொல்லவா வேண்டும்? உடம்பு அசையவில்லையாம். மூச்சு விடுகிறான் என்று சொல்லவும் முடியவில்லையாம். கண்ணீரும் வரவில்லையாம்: அந்தக் கண்களும் இமைக்க வில்லையாம். உள்ளம் பொருமி வெடித்துப் போகவும் இல்லை!

விபீஷணனுடைய சைத்யோபசாரத்தால் ராமன் மூர்ச்சை தெளிகிறான். 'துயரத்தால் தேம்பியிராது எப்படியாவது பகைவரை ஒழிப்பதே நம் கடமை' என்று கூறும் லட்சுமணன், அரக்கர்களோடு மற்றவர்களையும் தீர்த்து விடுவோம் என்கிறான்.

இந்த நிலையில் சந்தேகத்துடன் 'சீதையின் இருப்பிடம் போய் விரைவில் பார்த்து வருகிறேன்' என்று விபீஷணன் சொன்னதும், ராமனும் அந்த ஆலோசனையை ஒப்புக் கொள்கிறான். உடனே விபீஷணன்,

வண்டின(து) உருவம்
கொண்டான், மானவன்
மனத்திற் போனான்.

[மானவன் — ராமன். மனத்திற் போனான் — மனம் போல விரைந்தான்.]

'என் உயிரோடு தான் துன்பம் போகும்' என்ற சீதையின் சிந்தையை மாற்றும் செஞ்சொற்களைத் தன் அருமைத் திருமகள் திரிசடை சொல்லிக் கொண்டிருப்பது வண்டின் காதில் விழுகிறது. திரும்புகிறது வண்டு.

வழியிலே இந்திரஜித்தின் மாயம் முற்றும் தெளிவாகி விடுகிறது. 'எப்படி?' அடுத்த வாரம் பார்க்கலாம்.

காவியத்துள் ஒரு வீர காவியம்



நீ உண்டு; தெய்வம் உண்டு.

பி. ஸ்ரீ

18

திரிசடை தேற்றத் தேறியிருந்த சீதாபிராட்டியைக் கண்ணாரக் கண்ட விபீஷணனுடைய மகிழ்ச்சியை 'வாள் உயர் உவகை' (மிகவும் ஓங்கிய மகிழ்ச்சி) என்று கொண்டாடுகிறான் கவிஞன். உடனே உவகைச் செய்தியை அறிவிக்க வேண்டுமென்று திரும்பி வருகிறான்.

கண்டதும் கேட்டதும் சொன்னதும்

'என்ன வஞ்சனை ! உயிரோடிருப்பவனைக் கொலை செய்து விட்டது போல் மாயம் செய்தானே !' என்று நினைத்துத் திரும்பி வருகிறவன் வேறொரு வஞ்சனைச் செயலையும் கண்டு பிடிக்க நேர்ந்து விடுகிறது.

உண்மையில், இந்த வஞ்சனையின் தொடர்ச்சிதான் அது—இந்த வஞ்சனை புரிவதற்குக் காரணமே அந்த வஞ்சனைச் செயல்தான்.

அரக்கர் சேனை கும்பல் கும்பலாகக் கிளம்பிக் கிளம்பிப் போய்க் கொண்டிருக்கிறது. போர்க் களத்தை நோக்கி அல்ல, 'வேறு எங்கே போகிறார்கள் ?' என்று கவனித்தது வண்டு. (விபீஷணரூபம் இப்போது இதுதானே !)

அந்த அரக்கர்கள் பேசிக் கொள்வதையும் கவனித்தது வண்டு. அவர்கள் சூடிய பூக்களிலோ, மாலைகளிலோ அமர்ந்து கவனித்திருக்கலாமே !

'மைந்தன் போனான்' என்று குதூகலம் அடைகிறார்கள். எங்கே ? எதற்காக ? 'நிகும்பலை வேள்வி' என்ற வார்த்தையும் காதில் விழுகிறது.

'வெஞ்சிலை மைந்தன்
போனான், நிகும்பலை
வேள்வி யான்' என்று,
எஞ்சலில் அரக்கர்
சேனை எழுந்தெழுந்(து)
ஏகக் கண்டான்.

[வெஞ்சிலை — கொடிய வில். என்று — என்று பேசிக் கொண்டே. எஞ்சலில் அரக்கர் —— மிகப் பல அரக்கர்கள். ஏக— போக.]

'வில்லும் கையுமாக மைந்தன் போய் விட்டான், இனிமேல் அப்பனுக்கு என்ன வேலை ?' என்று பேசிக் கொள்கிறார்கள். 'நிகும்பலை வேள்வி செய்து கொண்டிருக்கிறான். இனி எதிரிக்கு ஏது வெற்றி?' என்று சிலர் சொல்லிக் கொள்கிறார்கள்,

விபீஷணன் இந்திரஜித்தின் சூழ்ச்சியை உடனே ராமனுக்குத் தெரிவிக்கிறான்.

இருந்தனள் தேவி;
யானே எதிர்ந்தனன்
என்கண் ஆர

[எதிர்ந்தனன் — எதிரே கண்டேன். ஆர — நிரம்ப.]
என்று அந்த மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறான்.

எனினும், 'மகிழ்ச்சி கொண்டாட இது தருணமல்ல' என்று கருதியது போல் 'வேள்வி முடித்து நம்மை அடியோடு முடிக்க மூண்டிருக்கிறான்' என்ற எச்சரிக்கையோடு தன் பேச்சை முடித்துக் கொள்கிறான்.

மகிழ்ச்சி, மங்களம், புத்திமதி

ராமனுடைய மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை.

வீரனும் ஐயம்
தீர்ந்தான், வீடணன்
தன்னை மெய்யோ(டு)





'ஆர்வமும் உயிரும்
ஒன்ற அழுந்துறத்
தழுவி, 'ஐய!

தீர்வது பொருளோ
துன்பம்? நீ உண்டு;
தெய்வம் உண்டு;

மாருதி உண்டு;
நாம்செய் தவம்உண்டு;
வலியும் உண்டால்'

[தீர்ந்தான் – தீர்ந்தவனுகி. மெய்யோடு – உடலோடு. அழுந்துற – அழுத்தமாக. தீர்வது பொருளோ துன்பம் – துன்பம் நீங்குவது ஒரு பெரிய காரியமா? மாருதி – அனுமன். வலியும் உண்டு – வலிமையும் உண்டு.]

என்று சொல்லுகிருன்.

'நீ உண்டு; தெய்வம் உண்டு' என்று விபீஷணனைக் கொண்டாடுவது கூர்ந்து நோக்கத்தக்கது. மருந்து கொணர்ந்து காப்பாற்றிய மாருதியைத் தந்தையின் ஸ்தானத்திற்கு உயர்த்திக் கொண்டாடியவன் விபீஷணனை இப்போது தெய்வ சமானனுக உயர்த்திப் பாராட்டுகிருன். இங்கே அனுமனையும் விபீஷணனுக்கு அடுத்த ஸ்தானத்திலேதான் வைத்துப் பேசுகிருன்.

விபீஷணனே இந்த மகிழ்ச்சியுரையைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தோன்றவில்லை. 'யாகத்தை எப்படியாவது தடுத்துவிட வேண்டும்; இந்திரஜித்து யாகத்தை முடிப்பானானல் யாருமே அவனை வெல்ல மாட்டார்! வெற்றி அரக்கருக்குத் தான்!' என்ற எச்சரிக்கையையே வற்புறுத்துகிறான்.

'ஆதலால் விடை தர வேணும், தம்பிக்கும் எனக்கும்' என்று வேண்டிக் கொள்கிறான். இப்படிச் சொல்லும்போதே விபீஷணன் லட்சுமணனுடைய ஆர்வத்தோடும் ஆவேசத்தோடும் பேசுவதைப் பார்க்கிறோம்.

'தம்பியோடும் செல்வேன்' என்று சொல்லி விட்டு,

சென்(று) அவன் ஆவி
உண்டு, வேள்வியும்
சிதைப்பன்!

என்று உறுதி கூறுவதைக் கேளுங்கள்.

'உன்னோடும் எழுவரானேம்; கடைக்குட்டியாக உன்னையும் பெற்றுப் புத்திர சம்பத்தால் தசரதன் பொலிகின்றான்!' என்று ராமன் சொன்னது எவ்வளவு பொருத்தமாகி விட்டது!

லட்சுமணன் போர்மேல் செல்லுகிறான். திரிபுர தகனத்திற்குச் செல்லும் சிவபெருமானைப் போலச் செல்லுகிறான்: அப்படிச் சிறிப் பொங்கிப் பொலிகின்றானும்.



தேவர்களோ மகிழ்ச்சியால் பொங்கிப் பொலிகின்றார் :

மங்கலம் தேவர்
கூற, வானவ
மகளிர் வாழ்த்திப்

பங்கமில் ஆசி
கூறிப் பலாண்டிசை
பரவப், பாகத்

திங்களின் மௌலி
அண்ணல் திரிபுரம்
தீக்கச் சீறிப்

பொங்கினன் என்னத்
தோன்றிப் பொலிந்தனன்
போர்மேற் போவான்.

[பங்கமில் ஆசி—குற்றமற்ற ஆசி. பலாண்டு இசை பரவ — பல்லாண்டு பாட. பாகத் திங்கள்—பிறைச் சந்திரன். மௌலி — முடி. அண்ணல் — (இங்கே) சிவபெருமான். தீக்க — தகிக்க.]

'நான் ஒருவனாகவே போய் வெற்றி சூடி வந்து விடுவேன்!' என்று சொல்லாமல் சொல்வது போன்ற பெருமிதத்துடன் புறப்பட்ட தம்பியை நோக்கி ராமன், 'வீரனே! நீ அனுமன் முதலான வானரத் தலைவர்களுடன் செல்வாய்' என்று விடை கொடுக்கிறான். படைத்துணையும் நிதான புத்தியும் இன்றியமையாதவை என்பது குறிப்பு.

பக்தியும் படைத்துணை

இந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டு லட்சுமணன் ராமனை வணங்கிப் புறப்படுகிறான், ராமபக்தியையும் முக்கியமான படைத் துணையாகக் கொண்டு :

மாருதி முதல்வ
ராய வானரத்
தலைவ ரோடும்

'வீர நீ சேறி'
என்று விடைகொடுத்
தருளும் வேலை,

ஆரியன் கமல
பாதம் அகத்தினும்
புறத்தும் ஆகச்

சீரிய சென்னி
சேர்த்துச் சென்றனன்
தருமச் செல்வன்

[மாருதி முதல்வராய—அனுமன் முதலாக உள்ளவரான. சேறி—செல்வாய். வேலை—போது. ஆரியன்—மேலோனான ராமன். சீரிய சென்னி— சிறப்புப் பொருந்திய முடி. தருமச் செல்வன்—(இங்கே) லட்சுமணன்.]

'நிகும்பலை' என்றாலே பயப்பட வேண்டியது என்பது போலல்லவா விபீஷணன் பேசி விட்டான்! அதுதானே இந்திரஜித்தின் கடைசி அரண், இறுதி நம்பிக்கை? இந்த நினைவிலே ராமனுக்குப் போர் மேல் போகும் தம்பியைப் பார்த்ததும் நெஞ்சு பொருமிக் கண்ணீர் வந்து விடுகிறது.

வழிந்து நிலத்திலே சிந்தும் கண்ணீரோடு விடை கொடுக்கும் அண்ணனையும், விடை கொண்டு வீர குதூகலத்துடன் புறப்படும் தம்பியையும் 'இப்படியும் ஒரு படமா?' என்று அதிசயிக்கும் நிலையில் காட்டுகிறது சப்த சித்திரம் :

பொலங் கொண்டல்
அனையமேனிப் புரவலன்
பொருமிக் கண்ணீர்

நிலங்கொண்டு படர
நின்று நெஞ்சழி
வானைத் தம்பி

வலங் கொண்டு, வயிர
வல்வில் இடங்கொண்டு,
வஞ்சன் மேலே

சலங்கொண்டு கடிது
சென்றான், 'தலைகொண்டு
வருவென்' என்றே.

[பொலங் கொண்டல்—அழகிய மேகம். அனைய—ஒத்த. புரவலன்—மன்னவன்; (இங்கே) ராமன். நிலங் கொண்டு படர—நிலத்திலே விழுந்து பரவ. வயிர வல்வில் — வயிரம் போல் உறுதியான வில். இடங்கொண்டு — இடப்புறத்தில் கொண்டு, சலம்—கோபம். கடிது — விரைவாக.]

லட்சுமணனைப் பிரிந்த ராமனது நிலையை நினைக்கும்போது விசுவாமித்திரனுடைய வேள்வி காக்க ராமன் பிரிந்த சமயம் தசரத சக்கரவர்த்தி அடைந்த நிலையை நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது :

தான்பிரி கின்றி -
லாத தம்பிவெங்
கடுப்பிற் செல்லா,

ஊன்பிரி கின்றி -
லாத உயிரென
மறைந்த லோடும்,

வான் பெரு வேள்வி
காக்க வளர்கின்ற
பருவ நாளில்

தான்பிரிந்(து) ஏகக்
கண்ட தயரதன்
தன்னை ஒந்தான்.

[பிரிகின்றிலாத — பிரிந்திராத. வெங்கடுப்பிற் செல்லா — மிக்க வேகத்தோடு சென்று. ஊன் பிரிகின்றிலாத — உடலை விட்டுப் பிரிந்திராத. வான்பெரு வேள்வி — மிக்க பெரிய வேள்வி; விசுவாமித்திர யாகம்.]

'மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டால் என' என்று அந்தப் பிரிவு பாலகாண்டத்திலே 'கையடைப் படல'த்தில் வருணிக்கப்படுகிறது. அப்போது தசரதனுக்கு ஏற்பட்ட அந்த மரணவஸ்தையை ராமனும் இந்தச் சிறு பிரிவில் அடைகிறான் என்றால், ராமன் லட்சுமணன் மீது எவ்வளவு அன்பு கொண்டிருந்தான் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

எரியும் கொள்ளிக் கட்டைகளுடன் வானர வீரர்கள் காட்டு வழியே போய் நிகும்பலையை அடைகிறார்கள். அரக்கர் சேனை ஒரு கருங்கடல் போல நிகும்பலையைச் சூழ்ந்து கிடக்கிறது. ஆனால் இப்போது அலையின்றி ஓய்ந்து கிடக்கும் அமைதியான கடல் போலத்தான் காண்கிறது. வழக்கமான ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ ஒன்றும் இல்லை. யாகம் நடக்கிறதல்லவா?

பகைவர் சேனையைக் கண்டதும் வானரசேனை விண்கிழிய ஆரவாரம் செய்கிறது. உடனே கைகலந்த போர் நடக்கிறது.

விபிஷணனே 'இந்திரஜித்தின் வேள்வியை அழிக்காமல் இந்தச் சேனையுடன் பொழுது போக்குவது தகாது' என்று கருதுகிறான். ஆனால் சேனை வழிவிட்டால் தானே?

ராம பக்தியைப் பெரும் படைத் துணையாக நம்பிப் போர் புரியும் லட்சுமணன் அம்பு மழை பொழிந்து அரக்கர்களோடு யாகத்தையும் அழிக்கிறான். லட்சுமண பாணங்கள் வேள்வியில் ஈடுபட்டிருந்த இந்திரஜித்தின் கவனத்தைக் கவர்ந்து விடுகின்றன.

சேனை முதலியன நிலைகுலைந்ததைக் கண்ட இந்திரஜித்து மனம் வெதும்பி நியமம் குலைந்து பெரிதும் வருந்துகிறான்.

வேள்வித் தீ அடங்கி அவியக் கோபத் தீ பொங்குகிறது இந்திரஜித்துக்கு. அனுமனே இந்தத் தீக்குத் தர்ப்பையும் விறகும் இடுவது போலப் பரிகாசம் செய்கிறான்.

“வில்கை என்னைக் கைவிடாது!”

பி.ஸ்ரீ

19

‘உன்னிடம் ஜானகிக்கு உயிர்ப் பிச்சை கேட்டேன்; தாழ்ந்து நயம் சொன்னேன்: நீயோ ஒன்றும் கேட்க வில்லை. அந்தக் கொலை என்ன ஆச்சு? சேனையுடன் வட திசை நோக்கிச் சென் றுயே, அந்தப் படையெடுப்புச் செய்தி தான் என்ன? பரதனைச் சுற்றத்துடன் அழித்து நீ மீண்டு வந்தது எப்போது? போகட்டும்; நீ தொடங்கிய வேள்வி முடிந்து விட்டதா?’ என்றெல்லாம் அனுமன் அடுக்கும் கேள்விகள் லட்சுமண பாணங்களைப் போலவே இந்திரஜித்தை இம்சிக்கின்றன.

இப்படிப் பேசும்போதே அனுமன் இந்திரஜித்தைக் ‘கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்!’ என்று அழைக்கிறுன்,

> மாயப்போர் ஆற்றல்
> எல்லாம் இனி ஒடு
> மாளும் அன்றே!

என்று சொல்லி விட்டு,

> கூற்றினர் குறுக
> வந்தார்

என்று லட்சுமண ரூபத்தில் யமன் வருகையையும் குறிப்பிடுகிறுன்;

> ‘வில்லிருக்கத் தோளிருக்க,
> எனக்குமுண்டோ குறை?’

நெருப்பெழப் பெருமூச் செறிந்து கேட்டுக் கொண்டிருக்கிறுன் இந்திரஜித்து. எவ்வளவு வெப்பமாக வெளிப் படுகிறது கோபச் சிரிப்பு! ‘என் முன்னே வந்து இப்படி யெல்லாம் பேசுகிறீரே, உம்முடைய வார்த்தைக்குப் பொருள் உண்டா?’ என்று தோள் குலுங்க, அந்தத் தோளணிகள் இலங்கக் கர்ஜிக்கிறுன்.

‘மூண்ட போர்களெல்லாம் நீங்கள் மாண்ட போர்களே! பிழைத்ததோ முறை தவறி! வீரப் புலிகளாகிய நீங்கள் அந்தச் சாவுகளை மறந்து விட்டீர்களா?’ என்று கேட்கிறுன். ‘எல்லாரும் இப்போது இறந்து விடுவீர்களே; உயிர் தரும் மருந்து யாரே கொண்டு வர முடியும்?’ என்றும் ஒரு கேள்வி போடுகிறுன்.

‘லட்சுமணனு கட்டும்: ராமனே யாகட்டும்; யார் வந்து எங்களை விலக்க முயன்றுலும் விலக்கிப் பார்க்கட்டும். இந்தக் குரங்குகளெல்லாம் கூட்டங் கூட்டமாக மாளப் போகின்றனவே! அப்போது ராம லட்சுமணர் அடையப் போகும் வருத்தத்தை முனிவர்களும் தேவர்களும் பார்க்கப் போகிறுர்களே!’ என்கிறுன்.

ஆவேசம் பொங்கிய வண்ணமா யிருக்கிறது இந்திரஜித்துக்கு,

> யானுடை வில்லும்
> என்பொற் ருேள்களும்
> இருக்க, இன்னம்
>
> ஊனுடை உயிர்கள்
> யாவும் உய்யுமோ
> ஒளிப்பி லாமல்?
>
> கூனுடைக் குரங்கி
> ேனுடு மனிதரைக்
> கொன்று சென்(று), அவ்
>
> வானினும் தொடர்ந்து
> கொல்வன்; மருந்தினும்
> உய்ய மாட்டீர்!

[பொற்ருேள்கள்—பொன் தோள்கள், அழகிய தோள்கள். இருக்க—இருக்கையில். ஊனுடை உயிர்கள்—உடம்பை யுடைய பிராணிகளெல்லாம். உய்யுமோ—தப்பிப் பிழைக்குமோ. ஒளிப்பு இலாமல்—ஒளிந்துக் கொள்ளா விட்டால். கூனுடைக் குரங்கு—கூனலை யுடைய குரங்கு.]

என்று எவ்வளவு ஆத்திரமாகப் பேசுகிறுன்!

"வேள்வி போனால் என்ன?—வேறு எது போய் விட்டால்தான் என்ன, என்னுடைய வில்லும் தோளும் இருக்கும் போது?' என்கிறான். தன்னுடைய வில்லை 'யானுடை வில்' என்று குறிப்பிடுகிறான். தன் தோளைக் காட்டிலும் தன் வில் இன்றியமையாத பகுதி என்பது குறிப்பு.

குரங்கையும் மனிதர்களையும் கொன்று தீர்ப்பதுடன் அவர்களுடைய ஆவிகளையும் தொடர்ந்து போய் வானிலும் அவர்களை இருக்க விடாமல் ஒழித்து விடப் போகிறானம். எதிரிகளின் ஸ்தூல சரீரங்களுடன் சூட்சும சரீரங்களையும் அழித்து விடப் போகிறானம்.

உலகில் ஒருமுறை கொன்று, சூட்சும லோகங் களிலும் இரண்டாம் முறை வதஞ் செய்து விடுவானம். உடலை வதஞ் செய்வதுடன் உயிரையும் வதஞ் செய்யக்கூடும் என்பது இந்திரஜித்து மதம். — மதம் கொண்டு பேசும் பேச்சு.

இப்படியெல்லாம் செய்யப் போகிற வீரம் தான் தன் கையில் அம்புகளாய்த் தோற்ற மளிக்கின்றனவாம்.

சூழ்கின்ற வீரம்
என்னகச் சரங்களாய்த்
தோன்றும் அன்றே!

[சூழ்கின்ற — ஆராய்ந்து செய்கிற; சரங்கள்—அம்புகள்.]

சொல் செயலாகிறது

இந்திரஜித்து இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அனுமன் சொன்ன பரிகாச வார்த்தைகளால் ஊக்கம் பெற்ற வானரர்கள் இந்திரஜித்தை நெருங்கி வந்து விடுகிறார்கள். இந்திரஜித்து கோபத்துடன் 'நில்லுங்கள், நில்லுங்கள்' என்று சொற்களாலும், தன் இரு விழி கக்கிய நெருப்புப் பொறிகளாலும் அதட்டி நிறுத்துகிறான்.


வேள்விக்காகக் கவசத்தைக் கழற்றியிருந்தான். அந்தக் கவசத்தை இப்போது பூண்டு தூணியைத் தோளில் கட்டி, விரல்—உறையைக் கையில் தரித்துக் கொண்டு, வில்லையெடுத்துத் தேர் ஏறி வில் நாணியை எறிந்து, சங்கையும் வாயில் வைத்துப் 'பம், பம்' என்று ஊதி முழக்குகிறான்.

'இன்று புகுந்தது பெரும் போர்' என்பது தெளிவாகிறது. வானரங்கள் நிலை கெட்டு ஓடுகின்றன. அனுமன் ஒரு மலையைத் தூக்கிக் கொண்டு போருக்குச் சித்தமாகிறான்.

'நில்லடா, நில்லு, நில்லு' என்று இந்திரஜித்து அனுமனையும் அதட்டுகிறான். அனுமன் வீசிய மலைப் பாறையைத் தூளாக்கி வீழ்த்தி அனுமனையும் சோர்ந்து போகும்படி அம்பால் அடிக்கிறான்.

சுக்கிரீவன் அங்கதன் முதலியோரும் வந்து தோன்ற, 'லட்சுமணனைக் காட்டுங்கள்' என்று அவர்களையும் அதட்டுகிறான் இந்திரஜித்து. 'மனிதரைக் காட்டி நீங்கள் உங்கள் மலைக்காடு நோக்கி மரியாதையாகப் போய் விடுங்கள்!' என்கிறான். 'அனுமனைக் காட்டிலும் நீங்கள் வலியரோ?' என்று சுடச் சுடக் கேட்கிறான்.





'வேள்வி மாண்டது; இனி அவன் பிழைத்துப் போகாதபடி நீ விரைந்து போக வேண்டும்' என்று விபீஷணன் லட்சுமணனைத் துரிதப் படுத்துகிறான். அனுமன் வேண்டுகோளின்படி லட்சுமணன் அவன் தோள் மேல் ஏறிக்கொள்கிறான்.

அஸ்திரங்களின் அட்டகாசம்

லட்சுமண பாணங்கள் புறப்படுகின்றன. இந்தப் பாணங்களை,

தீ ஒப்பன; உரும் ஒப்பன;
உயிர் வேட்டன திரியும்
பேய் ஒப்பன; பசி ஒப்பன;
பிணி ஒப்பன; பிழையா
மாயக்கொடு வினை ஒப்பன;
மனம் ஒப்பன; கழுகின்
தாய் ஒப்பன; சிலவாளிகள்
துரந்தான் துயில் துறந்தான்

[உரும் ஒப்பன – இடியை ஒத்து வருவன. உயிர் வேட்டன – உயிரை விரும்பியனவாகி. பிழையா – தவருத. வாளிகள் – பாணங்கள். துரந்தான் – செலுத்தினான். துயில் துறந்தான் – ராமனுக்காகத் தன் உறக்கத்தையும் துறந்தவன்.]

என்று அவை வருகின்ற உக்கிரத்துடனும் வேகத்துடனும் பயங்கர வனப்புடனும் காட்டுகிறது கவிதை.

தீயைக் கக்கிக் கொண்டு வருகின்றன சில பாணங்கள். இடிக் குரலில் 'சட்டச் சட சட' வென்று தங்கள் வருகையை அறிவிக்கின்றன சில.

வேறு சில பாணங்கள் 'ஐயோ பசி, பசி!' என்று உயிர்ப் பலி வேண்டித் திரியும் பேய்த் தெய்வங்கள் போல் அலறி அலைகின்றனவாம்.

இன்னும் சில பாணங்களைப் 'பசி ஒப்பன; பிணி ஒப்பன' என்று அறிமுகப் படுத்துகிறான் கவிஞன், பசியிலே எம பாசம் கண்டு பேசிய வாயால். 'பாசம் கலந்த பசி' என்று 'நாக பாசப் படல'த்தில் வருவதை நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

பசிப் பிணியைக் காட்டிலும் உடலை ஒழிக்கும் பிணிகளை ஒப்பன சில பாணங்கள் என்று சொல்லிவிட்டு 'ஒருவன் செய்யும் கொடியவினை மாயமாக எப்படியோ தவருது வந்து பலன் தருவது போல் இந்தப் பாணங்களும் குறி தவருது பலிகொள்ளும்' என்கிறான்.

எய்தவனின் 'மனம் ஒப்பன' என்று சில பாணங்களைக் காட்டுகிறான். லட்சு

மணனுடைய சிந்தைக்கும் அம்புபோடும் செயலுக்கும் உள்ள உறவை வேறு எப்படித்தான் வற்புறுத்த முடியும்? இந்த உபமானத்தையே சிகரமாக்கி விடுகிறானே கவி என்று தோன்றுகிறது. ஆனால் அது தான் இல்லை.

'கழுகின் தாய் ஒப்பன' என்பதுதான் உபமான சிகரம். ஏன் அப்படி? 'தாய்க் கழுகு தன் குஞ்சுகளை ஆபத்திலிருந்து காப்பாற்ற முயலும்போது எவ்வளவு உக்கிரமாகி விடுகின்றது!' என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

தாய்ப்பூனை ஒருவரும் தன் குட்டிகளை நெருங்க விடாது புலிபோலச் சீறி வரும் என்பது பலரும் அறிந்ததே. கழுகின் தாய் 'தாயோ, இது பேயோ?' என்று பிரமிக்கும் நிலையில் குஞ்சுகளுக்காகப் போராடும். கம்பனே, பேயைக் காட்டிலும் பிராணிகளின் தாயுணர்வு அபாய காலத்தில் பயங்கரமாக ஜொலிக்கக் கூடும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறான்.

இத்தகைய பாணங்களைச் சமாளித்துக் கொண்டு தன்னுடைய கொடிய அம்புகளையும் செலுத்தியவண்ணமாய்ப் போராடுகிறான். இந்திரஜித்தின் பல வகை அஸ்திரங்களும் வானர சேனையைப் படாதபாடு படுத்துகின்றன.

இந்திரஜித்து பிரமாஸ்திரம் தொடுப்பதை லட்சுமணன் பார்த்து விடுகிறான். போர் காண வந்து வானவீதியில் நின்று கொண்டிருக்கும் தேவர்கள் நடுங்குகிறார்கள்.

இந்தப் பிரமாஸ்திரத்தை லட்சுமணனும் தன் பிரமாஸ்திரத்தால் தடுக்கிறான். 'எவருக்கும் தீமை விளைக்காமல் இந்திரஜித்து விடுத்த பிரமாஸ்திரத்தை ஒழிக்க வேண்டும்' என்று லட்சுமணன் தன பிரமாஸ்திரத்தை ஏவுகிறான். இந்த நற்குணத்தைத் தேவர்கள் பாராட்டுகிறார்கள்.

இந்திரஜித்து திருமாலின் படையையே லட்சுமணன் மீது செலுத்தவும் துணிகிறான். இது லட்சுமணனுக்கு ஒரு கேடும் செய்யாமல் விலகிப் போகிறது. தேவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

சிவபெருமானுக்குரிய பாசுபதாஸ்திரத்தையும் பிரயோகம் செய்கிறான் இந்திரஜித்து. விண்ணும் மண்ணும் கலங்குகின்றன. பல இடங்களிலும் பெருங்குழப்பம் ஏற்படுகிறது.

லட்சுமணனோ அமைதியாகத் தானும் ஒரு பாசுபதாஸ்திரத்தைத் தொடுத்து விடுகிறான். இந்த அஸ்திரம் அந்த அஸ்திரத்தை விழுங்கி விடுகிறதாம்.

வெற்றிக்கே ஒரு வெற்றி!

இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்டதும் மகிழ்ச்சி—ஆரவாரம் விண்ணையும் மண்ணையும் நிறைத்து விடுகிறது. வானவர்கள் தங்கள் மகிழ்ச்சியை முரசடித்து அறிவிக்கிறார்கள். கடலும் குதூகலத்தைத் தன் அலைக் கரங்களைக் கொட்டி அறிவிக்கிறதாம்.

மேகமும் கர்ஜித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறதாம். அன்புக் கண்ணீர்த் துளி துளியாகச் சொட்டுவது போல் மழைத் துளிகள் விழுகின்றன.

கலைஞர்களின் சித்தக் கடலிலும் மகிழ்ச்சி—அலைகள் புதிய புதிய சிந்தனைகளை, கற்பனைகளை, ஆனந்தக் கனவுகளைத் தோற்றுவிக்கின்றன. தத்துவ உலகிலும் ஜயகோஷம்தான்.

தர்மம் ஆரவாரம் செய்கிறது: இவ்வாறு எங்கும் மகிழ்ச்சி: எங்கும் வெற்றிப் பெருமிதம். 'வெற்றி' யென்ற பெண்ணே தான் வெற்றி பெற்று விட்டதாகக் கைகொட்டி மகிழ்ச்சி அடைகிறாளாம். ஆம்: வெற்றிக்கும் வெற்றிதான், இந்திரஜித்து உலகத்தோடு எதிரிகளை முடித்துவிட வேண்டுமென்று பாசுபதாஸ்திரத்தை ஏவிவிட்ட அந்தச் சூழ்ச்சியை லட்சுமணன் தடுத்து விட்டது!

லட்சுமணனுடைய தெய்விகத் திறன் இந்திரஜித்தைத் திகைக்கச் செய்து விடுகிறது. ஆம்; திகைக்கத்தான், திடுக்கிடச் செய்து விடவில்லை. இந்திரஜித்துக்குத் தான் பயம் என்பது இன்னதென்று தெரியாதே!

தெய்வப் படை பழுதுற்ற போதிலும் இந்திரஜித்து பின்வாங்கவில்லை. தன் கைத்திறமை மீதுள்ள நம்பிக்கையை இவன் இன்னும் இழந்து விடவில்லை; ஒருபோதும் இழந்துவிடப் போவதில்லை. 'தெய்வம் கை விட்டாலும் என் கை என்னைக் கை விடாது!' என்பது இந்திரஜித்தின் கொள்கை.

பல பல பாணங்களை ஏக காலத்தில் லட்சுமணன் மீதும் சுக்கிரீவன் முதலியோர்மீதும் தாவி அவர்களைத் திகைக்கச் செய்து விட்டு, இந்திரஜித்து தன் சிறிய தந்தையாகிய விபீஷணனைச் சந்தித்துப் பேச விரும்புகிறான். ஏன்? எதற்காக?

காவியத்துள் ஒரு வீர காவியம்

ராஜபக்தி மதம்

பி.ஸ்ரீ

20.

'கோடிக் கணக்கான அம்புகளைச் செலுத்தி விட்டானே!' என்று வானர வீரர்களெல்லாம் திகைத்துப் போனார்கள். 'இந்த ராட்சஸக் கடலையும் இப்போது கடப்போம், அந்தத் தென் கடலைக் கடந்தது போல!' என்று வந்து விழுந்த வானர வீரர்களும், லட்சுமணனும் கூடத் திகைத்து நிற்கிறார்கள் இப்போது.

ஆனால் இந்தத் திகைப்பும் மயக்கமும் அதிக நேரம் நீடிக்கவில்லை. தனக்குக் கிடைத்த சொற்ப நேரத்திற்குள்ளே இந்திரஜித்து தன் சிற்றப்பாவைச் சந்தித்து உரையாடுகிறான். விபீஷணன் தான் இப்போது திகைப்போ மயக்கமோ இல்லாமல் இருப்பவன்.

இந்திரஜித்தின் வீரத்திலோ திகைப்பிற்கும் இடம் இல்லை; மயக்கத்திற்கும் இடம் கிடையாது. பிறரை மயக்கும் இம் மாயாவி தான் மயங்குவது இல்லையே.

தடியும் வேண்டுமோ ?

தடியும் கையுமாகக் காணப்படுகிறான் விபீஷணன். வலிய பெரிய தண்டாயுதம் இது. இந்தச் சாதுவும் போர்க்களமானதால் தண்டத்தைக் கையில் ஏந்திக் கொண்டிருக்கிறான். தற்காப்பு நியமமாக ஒதுங்கித் தனியாகவே நின்று கொண்டிருக்கிறான்.

இந்திரஜித்து சொல்லுகிறான்; "என்ன? சித்தப்பா! பரம சாதுவான நீர் இப்படி ஒரு முரட்டுத் தடியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீரே! முறை தவறி மனிசரைப் புகழ்ந்து கொண்டிருக்கிறீர்; ராட்சஸ ஜாதியில் பிறக்கும் பேறு பெற்றிருந்தும் ''ஜாதிப் பிரஷ்டம்'' ஆகி விட்டீர்!'

இந்திரஜித்து இப்போது இப்படிப் பேசுவது அதிசயமாகத் தோன்றவில்லை விபீஷணனுக்கு. 'பேதைமையுள்ள அடியார்களைப் போலத் தொழுது பின் செல்லுகிறீரே, புகழ்வது போதாதென்று' என்றும் பேசுகிறான் இந்திரஜித்து.

அடிமை முரசு

ராட்சஸ ஜாதியை விட்டுத் தங்களைப் புகழ வந்திருக்கும் விபீஷணனை மனிதர்கள் எப்படி நடத்துகிறார்கள்? 'சக்ரவர்த்தியின் தம்பியல்லவா?' என்று கௌரவமாக நடத்துகிறார்களா?

தங்களைப் புகழ்ந்து கொண்டே தங்களுடன் செல்வதற்கும் தகுதியற்றவனாகக் கருதப் படுகிறானாம் விபீஷணன். 'அடியேன்! புத்தி!' என்று கைகட்டி வாய் பொத்திப் பின் செல்லும் அடிமையின் நிலைதான் அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

இது மட்டுமா? இந்த அடிமைக்குப் பேச்சுச் சுதந்திரமே இல்லையாம். அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்லலாம்.

அவர்கள் இஷ்டத்தைப் பின்பற்றியே பேச வேண்டுமாம். 'தருமம், தருமம் என்று இவன் சொல்வதெல்லாம், அந்த மனிதர்களின் சொல்லைக் கிளிப்பிள்ளை போல் திருப்பித் திருப்பிச் சொல்வது தான்' என்று கூடச் சொல்லவில்லை இந்திரஜித்து.

சீறுகிறான் இந்திரஜித்து, 'அட அடிமை முரசே! உன்னை இப்போதே ஒழித்து விடுகிறேன்!' என்று:

முரண்தடம் தண்டும்
ஏந்தி மனிசரை
முறைமை குன்றப்

பிரட்டரில் புகழ்ந்து,
பேதை அடியரில்
தொழுது பின்சென்று,

இரட்டுறு முரசம்
என்ன இசைத்ததே
இசைக்கின் றுயைப்

புரட்டுவன் தலையை;
இன்று பழியோடும்
ஒழிவன் போலாம்.

[முரண் தடம் தண்டும்—ஒரு பெரிய முரட்டுத் தடியையும். பிரட்டரில்—ஜாதியிலிருந்தோ, தேசத்திலிருந்தோ பிரஷ்டரானவரைப் போல்; விலகி விட்டவர் அல்லது விலக்கப் பட்டவர் போல. பேதை அடியரில்—பேதைமை யுள்ள அடிமைகளைப் போல. இரட்டுறு—அறையப் படுகின்ற, முரசம் என்ன—முரசு போல, இசைக்கின்றுயை, சொல்லிக் கொண்டிருக்கிற உன்னை. பழியோடும் ஒழிவன்—(சிற்றப்பாவைக் கொலை செய்தேன் என்ற, இந்தப்) பழியோடும் ஒழிவேன்.]

முரசு ஒலித்த வண்ணமே ஒலித்துக் கொண்டிருப்பது போல் விபீஷணன் சொன்னதைச் சொன்னதைச் சொல்லிக் கொண்டே யிருக்கிறுன். முரசு அடிப்பதால் தான் ஒலிக்கும், தானுக ஒலிப்பதில்லை. விபீஷணன் சொல்லிக் கற்பிக்கும் கிளி அல்ல, ராமலட்சுமணர் அடித்துக் கற்பிக்கும் முரசு என்பது கருத்து.

விபீஷணன் கையில் கோல் இருப்பதே இந்திரஜித்தின் கோபத்தைக் கிளறி விடுகிறது. 'உன்னைக் கோல் கொண்டு கோட்டுகிறவர்கள் இருக்கும் போது உனக்குக் கோலும் வேண்டுமா?' என்பது போலப் பேசுகிறுன் இந்திரஜித்து.

'இரட்டுறு முரசம் என்ன இசைத்ததே இசைக்கின்றுயை' என்ற கோபத்திலே 'இந்த முரசு உடைக்கப்படுமோ?' என்ற பயம் வந்து விடுகிறது வாசகர்களுக்கு.

புரட்டுவன் தலையை
இன்று!

என்று முழங்குகிறது இந்திரஜித்தின் கோபம்!

'என் பழியும் உன் பழியும்'

'இந்தப் பழியைக் கட்டிக் கொண்டு தான் இந்த இடத்தை விட்டுப் போவேன்!' என்று கூறி முடித்தும், விபீஷணனை ஓங்கி அறையக் கை எழவில்லை. தன்னுடைய ராஜபக்திக் கொள்கையை—தனக்கு மதக்கொள்கையாகிவிட்ட அந்த வாதத்தை—தேசத் துரோகியும் இனத் துரோகியுமான விபீஷணன் செவிகளில் போட்டு வாட்டி வதைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மேலிடுகிறது.

'சித்தப்பா! இது என்ன வாழ்வு? இந்த ராஜ்யம் உமக்குக் கிடைத்து விடும் என்ற பேராசையா உம்மை இப்படி ஆட்டி வைக்கிறது? மூவுலக ஆட்சி கிடைப்பதானுலும் பழியோடு கூடிய வாழ்வை வீரர்கள் விரும்புவார்களா?' என்று கொதிக்கிறது இந்திரஜித்தின் நெஞ்சு.

ஏக சக்ராதிபதியின் விழி பட்ட மாத்திரத்தில் ஏற்கெனவே முதல்வராக இருந்தவர்களெல்லாம் வெதும்பி ஒதுங்கிக் கீழே விழுந்து வழி படுவார்களாம். அத்தகைய ஆட்சியும் சர்வாதிகாரமும் கிடைப்பதானுலும் இனத் துரோகம், ராஜத் துரோகம், சகோதரத் துரோகம் ஆகிய முப்பெருந் துரோகமும் செய்து கிடைக்கும் வாழ்வும் ஒரு வாழ்வாகுமா? அது பழியோடு கூடிய வாழ்வு என்கிறுன் பழி பாவங்களுக்கு அஞ்சாத இந்திரஜித்து; அந்த வாழ்வை வீரர் விரும்ப மாட்டாரே என்றும் பேசுகிறுன்.

இத்தகைய பழியுடன் கூடிய வாழ்வை விரும்பும் 'சித்தப்பாவைக்' கொல்வதாகிய பழியை விரும்பி ஏற்றுக் கொள்ளச் சித்தமா யிருக்கிறது இந்திரஜித்தின் உள்ளம்.

தன்னுடைய ராஜ பக்திக் கொள்கையைத்தான் எவ்வளவு வசிகரமாக எடுத்



துக் காட்டுகிறுன் இந்திரஜித்து தன் நெஞ்சிலிருந்து! மார்பில் அணிந்திருக்கும் விலை மதிக்க முடியாத இரத்தின மாலையின் நடுநாயக ரத்தினத்தை எடுத்துக் காட்டுவது போலக் காட்டுகிறுன்.

மீனேடு கற்றது

'இந்த என் கொள்கை தான் அரக்கர்களுக் கெல்லாம் பொதுவுடைமையாக இருக்கும் கொள்கை' என்று மார் தட்டுகிறுன்.

நீருள தனையே
உள்ள மீனினம்;
நிருத ரெல்லாம்
வேருள தனையும்
வீவர் இராவண
னேடும் மீளார்.

[நீருளதனையே—நீர் இருக்கும் வரை தான். உள்ள மீனினம்—மீன் கூட்டம் இருக்கும். நிருதர்—அரக்கர்கள். வீவர்—இறந்து படுவார்கள். மீளார்—உயிருடன் திரும்ப மாட்டார்.]



நீர் இருந்தால் மீன் இருக்கும் ; நீர் வற்ற மீனும் இறந்து போகும். நீர் வாழ் பறவையோ வேறொரு நீர்நிலைக்குப் போய்விடும். அரக்கர்கள் தங்கள் ராஜ பக்திக் கொள்கையை மீனிடம் கற்றுக் கொண்டார்களாம் ; நீர் வாழ் பறவையிடம் கற்றுக் கொள்ள வில்லையாம்.

மீனினம் ராட்சஸ இனத்திற்குக் கற்பித்த இந்தப் பாடத்தை இனத் துரோகியான விபீஷணன் மட்டும் கற்றுக் கொள்ளவில்லையாம்.

அரக்கர்களெல்லாம் ராவணனோடு வம்ச நாசம் ஆகி விடச் சித்தமாயிருக்கிறார்கள் என்பதை அழுத்திப் பேசும் இந்திரஜித்து விபீஷணனை நோக்கி,

ஊர் உள(து); ஒருவன்
நின்றாய் நீ உளை !

[உளை—உள்ளவனாவாய்.]
என்று இடித்துரைக்கிறான்.

சுடுகாட்டில் கொலுவா ?

'ஊர் தான் மிஞ்சும்; நீயும் மிச்சமாக இருப்பாய் !' என்று கூறும் இந்திரஜித்து, 'ஆனால் ஆள வேண்டாமா? எப்படி, யாரை ஆள்வது ?' என்று கேட்கிறான்.

ஆர் உளர் அரக்கர்
நிற்பார், அரசுவீற்—
றிருக்க ஐயா ?

'ராவணன் மாண்டதும் ஒரே மயானக் காடு தானே ! இந்த ஊர் மயானத்திலா தங்கள் மாட்சி தோன்றச் சிங்காசனத்தை அமைத்துக் கொள்ளப் போகிறீர்கள் ? அரக்கர்கள் இல்லையே என்று குரங்குகளைக் குடியேற்றி ஆட்சி செலுத்துவீர்களா ?' என்பது இந்திரஜித்தின் பரிகாசக் கேள்வி. விபீஷணன் வீணைக் கனவு காண்கிறான் என்பது குறிப்பு.

'கண்களை விழித்துப் பாரும், சித்தப்பா! ராவணேசுவரன் அல்லவா வீர சிங்காதனத்தில் வீற்றிருப்பவன் ? திருமாலைப் போர்க்களத்திலே தளர்ந்து விழுமாறு தள்ளிவிட்டுச் சிவபெருமானைக் கைலையோடு ஒரு கையில் தூக்கிக் கொண்டானும் ராவணேசுவரன்.

கந்தனார் தந்தை
யாரைக் கயிலையோ(டு)
ஒருகைக் கொண்ட
எந்தையார்

என்று எவ்வளவு பெருமையாகச் சொல்லிக் கொள்கிறான் இந்திரஜித்து !

இத்தகைய அரசுப் பெருமையுடன் ராவணனுக்குப் 'பார்ப்பனக் குலத்துக்கெல்லாம் தனிமுதல் தலைவன்' என்ற பெருமையும் உண்டு. 'இந்தத் தலைமை விபீஷணனுக்கே !' என்று கூட உலகம் நம்பும்படி நடந்து கொண்டானும் ராவணன். அப்படி யிருந்தும்,

மனிசருக்(கு) அடிமை
யாய்நீ இராவணன்
செல்வம் ஆள்வாய் !

என்கிறான் இந்திரஜித்து.

அழுவாயா ? தொழுவாயா ?

இந்திரஜித்து மேலும் பேசுகிறான்:

எழுதிஏர் அணிந்த
திண்தோள் இராவணன்
இராமன் அம்பால்
புழுதியே பாய
லாகப் புரண்டநாள்,
புரண்டு மேல்வீழ்ந்(து)
அழுதியோ ? நீயும்
கூட ஆர்த்தியோ ?
இவனை வாழ்த்தித்
தொழுதியோ ? என்னே
செய்யத் துணிந்தனை ?
விசயத் தோளாய் !

[எழுதி ஏர் அணிந்த திண்தோள் — சித்திரத்தில் எழுதிப் பார்க்கும் அழகு வாய்ந்த வலிய தோள்கள். பாயல் — பாய். ஆர்த்தியோ — மகிழ்ச்சி — ஆரவாரம் செய்யப் போகிறாயோ..]

இப்படி யெல்லாம் பரிகசித்து விட்டுத் தன் இறுதி உரையில், 'செத்துப் போய் மருந்தினால் உயிர் பெற்றிருக்கும் மானிடர் இலங்கை வேந்தனைக் கொன்று விடுவார்களாம். நீயும் இந்தச் செல்வத்தை அனுபவிக்கத் தகுதியுள்ளவன்தான் !' என்று பரிகாச சிகரத்திலேயே விபீஷணனைத் தூக்கி வைப்பதுபோல் பேசி விடுகிறான்.

உடனே 'இதோ இந்த அம்போடும், நீ வானத்திற்கே போய்ச் சேரவேண்டியவன்தான் !' என்று முடிக்கிறான். ஆனால் உடனே அம்பு போட்டு விடவில்லை: 'சிறிய தந்தை என்ன பதில்தான் சொல்ல முடியும் ?' என்ற நினைப்பில் கொஞ்சம் அவகாசம் கொடுத்துப் பார்க்கிறான்.